# முதலாவது கரிகாலன்

என்கிற

## சோழன் கரிகாற் பெருவளத்தானைப் பற்றிய

# ஆராய்ச்சி.

1538

இது

தஞ்சை

கலியாணசுந்தரம் ஹைஸ்கூல்

தலைமைத் தமிழ்ப் பண்டிதர்

L. உலகநாத பிள்ளையால்

இயற்றப்பெற்றது.

லாலி எலக்ட்ரிக் அச்சுக்கூடம், கருணாநிதி வைத்தியசாலை,

தஞ்சாவூர்.

1913.

*All Rights Reserved.*] [விலை அணா 12.

To

Rao Bahadur

**K. S. Srinivasa Pillai,**

**Tanjore.**

This Little Book
is respectfully dedicated
as a token of gratitude
for
the keen interest he is taking
in the
enlightenment of the
Tamilians.

The Author.

# முகவுரை.

---

தமிழகத்தின்கண் செங்கோலோச்சிய முடியுடைத் தமிழ் வேந்தர் மூவருள் ஒருவராகிய சோழர், சரித காலத்தும் அதற்கு முற்பட்ட காலத்தும் மிகு பராக்கிரமத்தோடிருந்தவ ரென்பது எவர்க்கும் உடன்பாடெனினும், சோழன் கரிகாற் பெருவளத்தானுக்கு முற்பட்டிருந்தாரது வரலாற்றை வரன்முறையாகத் தெரிந்துகோடற்குப் போதுமான ஆதாரங் கிடைத்திலாமையின், இவனையே, சோழர் மரபில் முன்னர் வைத்தெண்ணப்படுந் தொன்மையுற்றவனாக, புராதன சரித்திர ஆராய்ச்சியாளர் கொள்வாராயினர்.

இப்பெருவளத்தான், இப்பொழுதைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரேயே, நம்மையாளும் நாகரிக மன்னவர் பெருந்தகையைப்போல, நீர்நிலைகளைப் பேணி, உழவு, வாணிகம், கைத்தொழில்களை வளம்படுத்துக் கல்வியை மேம்படச் செய்து, கடல் மருங்கிலுள்ள நகரை இராஜதானியாகக்கொண்டு, ஏற்றுமதி இறக்குமதிகளாற் செல்வம் பெருக்கி, இமய முதற் குமரியின் காறும் ஆணை செல்ல, சமாதான மேலிட நாட்டாட்சிபுரிந்த நெடுந்தகை யாவான்.

இவன் சரிதவாயிலாகப், பண்டைக்கால ஒழுக்க வழக்க நாகரிகங்களிற் சிலவற்றை நம்நாட்டு இளைஞர்க்கு அறிவுறுத்தல் காரணமாக, சங்கநூலினும் பிறவற்றினும் இவனைப்பற்றி யான் கண்டவற்றைத் திரட்டி, ஒருவாறு முறைப்படுத்து 'முதலாவது கரிகாலன் என்கிற சோழன் கரிகாற் பெருவளத்தான்' எனப் பெயரிய இச்சிற்றாராய்ச்சியை எழுதினேன்.

இவ்வாராய்ச்சி, 'கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின்' முதல் வருடக் கூட்டத்தே சென்னை வெப்பேரி S. P. G.

மகூல் தமிழ்த் தலைமைப்பண்டிதரும், 'நல்லாசிரியன்' ஆசிரியருமாகிய ஸ்ரீமான் C. R. நமசிவாய முதலியாரின் அக்கிராசனத்தின்கீழ்க் கூடிய புலவர் குழாத் தன்பு வாசிக்கப்பட்டு அங்கிகரிக்கப்பெற்றது.

நகாறும் வெளிவராத சாசனங்களும் சங்கநூல்களும் ருப்பவும், வந்தவற்றுள்ளும், கிடைத்த சிலவற்றையே மாகக் கொண்டு இஃது எழுதப்பெற்றதாகலின், கண் குற்றம் பல இருத்தல் கூடும். ஆதலால் குற்றங் து குறைபெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடன்.

தனை வெளிப்படுத்தற்கு உதவிபுரிந்த 'தமிழ்க் கணக் திவுநூல்' ஆசிரியர் மகா-ள-ள-ஸ்ரீ நடேசையரவர் டைய பெருந்தகைமை பாராட்டற் பாலதேயாம்.

ஞ்சை,<br>1—13.

**L. உலகநாத பிள்ளை.**

# பொருளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | சோழர்கள் தமிழர் ... ... ... | 1—7 |
| 2. | கரிகாலன் காலம் ... ... ... | 8—16 |
| 3. | கரிகாலன் வரலாறு ... ... ... | 17—25 |
| 4. | கரிகால்வளவன் வென்றிமேம்பாடு ... ... | 26—34 |
| 5. | கரிகாலன் இறைமாட்சி ... ... ... | 35—41 |
| 6. | பெருவளத்தான் வாணிகத்துறையை வளம்படுத்தது ... ... ... | 42—48 |
| 7. | திருமாவளவன் காலத்திற் செந்தமிழ் நிலைமை. | 49—53 |
| 8. | திருமாவளவன் சமயக்கொள்கையும் பிறவும்... | 54—60 |



# சோழன் கரிகாற் பெருவளத்தான்.

## 1-வது அதிகாரம்.

## சோழர்கள் தமிழர்.

சோழன் கரிகாற் பெருவளத்தானைப் பற்றித் தெரிய வேண்டுவனவற்றை ஆராயப் புகுமுன், சோழ ரென்பார் யார்? எக்குடியிற் பிறந்தவர்? எக்காலத்தில் இத் தமிழகத்து ஆட்சியெய்தினர்? என்றின்னவற்றை அறிந்து கோடல் இன்றியமையாததாகலின், அவற்றைச் சிறிது ஆராய்வாம்.

சோழரென்பார், தமிழகத்தின்கண் செங்கோ லோச்சி யிருந்த முடியுடைத் தமிழ் வேந்தர் மூவருள் சோணாட்டை ஆட்சி புரிந்தாராவார்.

சோழர் என்னும் பெயர் ஒரு குடிக்கட் பிறந்தாரைக் குறிக்கும் பெயராகும். இதனைச் செய்யுள் வழக்கிலே யன்றி உலகவழக்கினும் நன்கறியலாம். சோழனே யல்லாது சேரன், பாண்டியன் என்பனவும் குடியாற் பெற்ற பெயர் களேயாம். இவற்றைப் பன்னிருபாட்டியற் சூத்திரம்[1] இனிது விளக்கும்.

---

1. "குடிப்பெய ராவன கூறுங் காலைச்
சேரன் சோழன் பாண்டியன் என்றிப்
போல்வன பிறவும் பொருத்தங் கொளலே."

பன்னிரு பாட்டியல், சொல்லியல், பெயர்ப் பொருத்தம்

—சூ. ௩.

இன்னும், தொல்காப்பியத்திற்கு[2] உரைகண்ட சேனாவரையர், நச்சினார்க்கினியாரை உள்ளிட்ட ஆசிரியன்மாரும், நன்னூற்கு[3] உரை யெழுதிய சங்கரநமச்சிவாயப் புலவரும், சேரமான்மலையமான்', 'சேர சோழ பாண்டியர்' எனவே குடியாற் பெற்ற பெயர்க்கு உதாரணங் காட்டினர்.

அன்றியும், 'வழங்குவ[4] துள்வீழ்ந்த' என்னும் திருக்குறளுரையில், 'பழங்குடி—தொன்றுதொட்டு வந்த குடி; தொன்றுதொட்டுவருதல்—சேர சோழ பாண்டியர் என்றாற் போலப் படைப்புக்காலந்தொட்டு மேம்பட்டு வருதல்' எனக் கூறிப் போயினர் ஆசிரியர் பரிமேலழகியாரும்.

ஆகவே, சோழரென்பார், 'சோழர்குடி' என்னும் ஓர் பழங்குடிக்கட் பிறந்தவர் எனல் இருவகை வழக்கினும் பயின்று வருதல் காண்க.

இனி, அப்பழங்குடிதான் யாது எனிற் கூறுவாம். உலகின்கண் காணப்படும் மக்கள்,—காக்கேசியர் (வெண்ணிறத்தர்), மங்கோலியர் (மஞ்சள்நிற மக்கள்), நீகிரோவர் (கரியவண்ணத்தர்) என்னும் மூன்று வகையுள் அடங்குவர்[5]. இவருள், மங்கோலியர் மஞ்சள்நிற முடைமைபற்றி ஆரியர்களால் இயக்கரெனக் கூறப்பெற்றனர். இம்மக்கள் இமயமலையின் வடபாலிலுள்ள மிகவும் உயர்வான மேட்டுத் தரைகளிலும் மலையடிவாரங்களிலும் வாழ்ந்து வந்தனர். மேலிடங்களில் வசித்தவர் கீழே வசிப்பவரைவிடத் தம்மை உயர்ந்தவரெனக் கருதி வானவரேனச் சொல்லிக்கொண்டனர்[6]. இவர்களில் ஒரு கூட்டத்தார் திபேத்துக்கும் நேபாளத்திற்கும் இடையிலுள்ள கணவாய்களின் வழியாக இந்தியாவினுட் புகுந்து, கங்கையாற்றின் முகத்துவாரத்தில், தமிழ் மக்கள் நிலைபெற்று வாழ்க்கை புரிந்து வந்தமையின்,

---

2. தொல்காப்பியம், சொல்லதிகாரம்—பெயரியல், சூ. கக.
3. நன்னூல், சொல்லதிகாரம்—பெயரியல், சூ. ககூ.
4. திருக்குறள், ஒழிபியல்—குடிமை அதி., கு. ரு. விசேடவுரை.
5. The Dominion of Man.
6. The Tamils, eighteen hundred years ago—p. 45.

‘தமிழுக்’ (Tamuluk) எனப் பெயர் பெற்றிருந்த சிறந்த வியாபாரத்தலத்திற் குடியேறினர்.

இங்ஙனம் குடியேறிய இம்மக்களும் பழைய தமிழ்மக்களோடு தலைப்பெய்து, அவரது ஒழுகலாற்றினைத் தாமும் கைக்கொண்டொழுகி, அவர் வேறு தாம் வேறு என்றறியாவண்ணம் தமிழராயினர். இத்தமிழ்மக்கள் நாளடைவிற் பல்குற்றமையின், தமக்குப் போதுமான இடம் நாடுதல் காரணமாகத் தென்னாடுகளிற் புகுந்து, அங்கு வாழ்ந்திருந்த நாகர்[7] முதலியோரை வென்று, நாட்டைக் கைக்கொண்டு, வடவேங்கடம் தென்குமரிக்கு இடையேயுள்ள நாடுகளிற் றங்கி, ஆட்சி புரிவாராயினர். இவர்கள் ஆட்சிபுரிந்த இடமே ‘தமிழகம்’ எனப்படும்.

இவ்வாறு, நாட்டைத் தம்வசப்படுத்த முதன்முதல் முயன்ற தமிழ்மக்கள் குழுவிற்குத் தலைமை வகித்தவர், ஏனையோரை நோக்கப் பழைமை வாய்ந்திருந்தமையின், ‘பழையர்’[8] என அழைக்கப்பெற்றனர்; இவர்களே பாண்டியராவர். * இவர்க்குப் பின் கடல் வழியாக வந்தவர் ‘திரையர்’[9] என்றழைக்கப்பெற்றனர். இவர்களே சோழர்களாவர். இவர்க்குப்பின் வந்தவர், கொல்லி, நீலகிரி முதலிய மலைகளைத் தமக்கு வாழும் இடமாகக் கொண்டதற்கேற்பத், தம்முன்னோர்களைப் போலவே தம்மை ‘வானவர்’[10] என வழங்குவாராயினர்; இன்னவர்களே சேரராவர். ஆகவே, சேர சோழ பாண்டியர்கள் தமிழ்மக்கள் என்பது இதனால் விளங்கிக் கிடத்தலின், ‘சோழர்குடி’ என்பது ‘தமிழ்ப் பழங்குடி’ என்பது பெறும்.

7. தென்னாட்டுப் பழங்குடிகளில் ஒரு சாரார், பாம்பினை வழிபட்டு வந்தமையானும், ஐந்தலை, முத்தலைகளையுடைய நாகவடிவினைத் தம்முடியில் தரித்துவந்தமையானும் இப்பெயர் பெற்றனர்.

8. பழையன் மாறன். பழைமை எனப் பொருள்படும் பண்டு என்னும் சொல்லடியாகப் பிறந்த பண்டையர் என்பது பாண்டியர் என மரீஇ நின்றது.

9. தொண்டைமான் இளந்திரையன்.

10. வானவரம்பன்.

இனி, பாரதப் போர்க்கு முற்பட்ட காலத்தினைச் சரித காலத்திற்கு முற்பட்ட காலமெனவும், அப்போர் நடந்தது தொட்டு இது காறும் சென்ற காலத்தினைச் சரிதகால மெனவும் புராதன சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுவர். பாரதப் போரோ, கிறிஸ்து பிறப்பதற்கு 1400 வருடங்களுக்கு முன்னர் நடந்ததாகும். இப்போரில் பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் பதினெண் ணாளளவும் சோறளித் துதவினமையின், உதியன் சேரலாதன் என்னும் அரசன் 'பெருஞ் சோற்றுதியன் சேரலாதன்' என வழங்கப் பெற்றான் என்று, அவனோடு ஒரு காலத்தினராய முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் புலவர் விளக்கியுள்ளார்.[11] சோழனொருவன் பாரதப் போர் முடிவுறுமளவும் தருமன் படைக்கு உதவி புரிந்தனன் என்பது 'பரணியால்'[12] இனிது விளங்குகின்றது. பாண்டு மைந்தரில் ஒருவனாகிய சகதேவன் தெக்கண தேயத்திற் போந்து பாண்டியர்களை வென்று சென்றதும்,[13] அருச்சுனன் ஓர் பாண்டியன் மகளை மணம்புரிந்ததும்,[14] பாரதத்துப் பரக்கக் காணலாம். கோதாவரிக் கரையில், பஞ்சவடிக்கண் (Nasik), அகத்தியமுனிவரை ஸ்ரீராமர் கண்டு சென்றதாக இராமாயணத்திற்[15] கேட்கப்படுகின்றமையின், இராமாயண காலத்தில் அகத்தியமுனிவர் இருந்தாராதல் வேண்டும். இம்முனிவரர் ஆணையை மேற்கொண்டு செம்பியன் (சோழன்) ஒருவன் ஆகாயத்தில் அசைந்துகொண்டிருந்த

11. மண்டிணிந்த நிலனும்.

* * *

வான வரம்பனை நீயோ பெரும
அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்.—

"புறநானூறு", உ.

12. "தாங்கள் பாரத முடிப்பளவு நின்று தருமன் தன்கடற்படை தனக்குதவி செய்த வவனும்"—

கலிங்கத்துப் பரணி இராச பாரம்பரியம், கஎ.

13. Sabhaparuvam, Chap. 31, *Bombay Edition.*

14. வியாசபாரதம், தமிழ் மொழிபெயர்ப்பு, பக்கம் 839—841.

15. The Early History of Dakhan.

மதிலை எறிந்தமையின், 'தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்' என வழங்கப் பெற்றனன்.[16] இன்னும் கிஷ்கிந்தையில், சுக்ரீவன், சீதா பிராட்டியைத் தேடிவருமாறு வானரவீரர்களை ஏவியஞான்று தென் முகமாகச் செல்லுதற்குரியாரை நோக்கி, "அவ்வாறே ஆந்திரம், புண்டரம், சோளம், கேரளத்தோடு கூடிய பாண்டிய நாடுகளையும் காண்பீர்கள்" என்று உரைத்ததாக வான்மீகராமாயணம்[17] கூறு நிற்கும். ஆகவே, இன்னவற்றை யெல்லாம் சீர்தூக்குமிடத்து, சேர சோழ பாண்டியர் என்னும் தமிழ்வேந்தர் மூவரும், பாரத இராமாயண காலங்களில் மிகு பாக்கியமத்தோடு தென்னாட்டின்கண் ஆட்சி செய்திருந்தனர் என்பது வெளியாதல் காண்க.

இன்னும், சரித்திரபண்டிதர் R. C. தத்தர் தாம் எழுதிய 'புராதன இந்திய நாகரீகம்' என்னும் உரைநூலின்கண், பிரபல ஆதார வாயிலாக நுண்ணிதின் ஆராய்ந்து, வேத காலம் கி. மு. 2400 முதல் 1400 வரையிலுமென வரையறுத்திட்டனர். ஆரியமக்களுக்குப் புராதனமானது இருக்கு வேதம்; அதைப்போலவே தமிழ் மக்களுக்கு மிகப் பழமையான நூல் தொல்காப்பியம். இருக்குவேதம், ஆரியர்களின் பண்டைக்கால ஒழுக்க வழக்க நாகரீகங்களை அறிதற்கு எவ்வாறு கருவியாக நின்றதோ, அவ்வாறே, தமிழர்களின் பண்டைக் கால ஒழுக்க வழக்க நாகரீகங்களை உணர்தற்குக் கருவியாயிருப்பது தொல்காப்பியமேயாம். இத் தொல்காப்பியத்தில், 'வேந்தன் படையாளர் வென்றி யெய்திய காலத்து, இன்ன வேந்தன் படைஞர் வென்றனர் என்பதற்கு அறிகுறியாக அவ்வவ் வேந்தற்குரிய அடையாளப் பூவை அவ்வவ்வேந்தன் படைஞர் சூடுவர்' எனப் பொதுப்படச் சொல்லவந்த விடத்தில், 'வென்றி எய்திய வேந்தன் படைஞர் பனை, வேம்பு, ஆத்தி என்பவற்றின்

---

16. உலகந் திரியா வோங்குயர் விழுச்சீர்ப்
பலர்புகழ் மூதூர்ப் பண்புமேம் படீஇய
வோங்குயர் மலயத் தருந்தவ னுரைப்பத்
தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்.—
'மணிமேகலை', விழாவறை காதை, வரி. க—ச.

17. கிஷ்கிந்தாகாண்டம்,—சக-ம் ஸர்க்கம், கஉ-ம் சுலோகம்.

மலரை மிலைந்திடுவர்' என விதந் தோதப்பட்டுள்ளது.[18] இம்மூவகை மலரை மாத்திரங் கூறவே, இவற்றை அடையாளப் பூவாகக் கொண்ட மூவரையன்றி, முடியுடை மன்னர் வேறு இருந்திலர் என்பது உய்த்துணரக் கிடக்கின்றது. இம்மலரைச் சூடுதற்குரியோர் சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தரேயாவர். இவர் மூவரும், ஆசிரியர் தொல்காப்பியனார் நூல் செய்கின்ற காலத்துத் தமிழ் நாட்டின்கண் செங்கோலோச்சி இருந்தனராதல் ஒருதலையாகலின், இவர்களிடத்துத் தாம் கண்ட ஒழுகலாற்றினையே உதாரணமாகக் கொண்டனர் போலும். இலக்கியங் கண்டதற்கு இலக்கண மியம்பல் மரபாகலின், தொல்காப்பியம் யாத்தற்கு முன்னரேயே தமிழ் இலக்கியம் பல இருந்திருத்தல் வேண்டும். இலக்கியங்கள் உளவாகவே, அவற்றை வழங்கிய தமிழ்மக்கள், அவைகளுக்கு நெடுநாளைக்கு முன்னமே வாழ்ந்திருந்தாராதல் பெறப்படும். 'இவ் ஆசிரியர் ஆதியூழியின் அந்தத்தே இந்நூல் செய்தலின்'[19] எனவும், 'இவர் இந்நூல் செய்தபின்னர் வேதவியாதர் சில்வாழ்நாட் சிற்றறிவினோர் உணர்தற்கு வேதங்களை நான்கு கூறுகச் செய்தனர்'[20] எனவும், உரையாசிரியர் நச்சினார்க்கினியர் கூறுமாற்றால், தொல்காப்பியம், வேதகாலத்தில் இயற்றப் பெற்றதென விளங்குமாறறிக. தொல்காப்பியம் நெடுநாளைக்கு முற்பட்டதாகவே, தமிழ்மக்களின் ஒழுக்க வழக்கங்களைச் சொல்லப்புக்க அத்தொல்காப்பியத்திற்கும் முற்பட்டவர் தமிழரெனல் சொல்லாமலே யமையுமன்றே? ஆகவே, இங்குக் கூறிய இவ்வனைத்தையும் நன்காராயு

---

18. வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட் டயர்ந்த காந்தளு முறுபகை
வேந்திடை தெரிதல் வேண்டி யேந்துபுகழ்ப்
போந்தை வேம்பே யாரென வரூஉ
மாபெருந் தானையர் மலைந்த பூவும்—
பொருளதிகாரம், புறத்திணையியல், சூ. ரு.

19. தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், ௪-வது சூத்திர வுரை.

20. ஷை பாயிரவுரை—நச்சினார்க்கினியம்.

மிடத்துச், சோழராகிய தமிழ்மக்கள், இன்னகாலத்துக் குடியேறினோரென, நம்மனோரால் வரையறுத்தல் செல்லாத அத்துணை நெடுங்காலந்தொட்டு, இத்தமிழகத்து மேம்பட்டு வந்தவர் என்பது தெற்றென விளங்கி நிற்றல் அறிக.



## 2-வது அதிகாரம்.

# கரிகாலன் காலம்.

இனி, இச்சோழர் குடிக்கண் தொன்மையுற்றவனாகிய கரிகாற் பெருவளத்தான் சரிதத்தை ஆராய்வதன் முன், இவனிருந்த காலத்தை ஆராய்தல், சரித ஆராய்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப்படுவ தொன்றாகும். இன்னவன் காலத்தை வரையறுக்கப் புகுமுன்னர், இவன் காலவரையறை காரணமாகத், தம்முட் கருத்து வேறுபட்டார் கொள்கையை எடுத்துக் கூறி, அவற்றுள், தழுவுவன தழீஇத் தவிர்வன தவிர்தல் முறையாகலால், அவற்றை யீண்டு எழுதுவோம். அங்ஙனம் மாறுபட்டார் இருவருள், ஒரு சாரார் கூறுவது :—

‘சிலப்பதிகார உரையாசிரியர், அரங்கேற்றுக்காதை அடியுரையில், [21] ‘கரிகாற்பெருவளத்தாற்கு அவன் அவை அரங்கேறிக் காட்டலை விரும்பி’ எனக் கூறுமாற்றால் ‘சிலப்பதிகாரச் சரித்திரம் நடைபெற்றபோது கரிகாலன் இருந்தனன்’.

‘குமரியொடு வட இமயத்தொருமொழி வைத்துலகாண்ட சேரலாதற்குத், திகழொளி ஞாயிற்றுச் சோழன் மகள் ஈன்ற மைந்தன், கொங்கர் செங்களம் வேட்டுக் கங்கைப்போர்

---

21. ‘எழாண் டியற்றி யோரீ ராண்டிற்
சூழ்கழன் மன்னற்குக் காட்டல் வேண்டி’—
சிலப்பதிகாரம், அரங்கேற்றுக்காதை, ௧௦, ௧௧.

யாற்றுக் கரைபோகிய செங்குட்டுவன்'[22] இதில், 'ஞாயிற்றுச் சோழன்மகள்' என்றது கரிகாலன் மகள் 'நற்சோணையை'; இச்சோணையை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மணந்து செங்குட்டுவனை ஈன்றெடுத்தனன்

'இச்செங்குட்டுவன், வஞ்சிநகர்க்கண்ணே,[23] பத்தினிக் கடவுளாகிய கண்ணகிக்குக் கோயில் அமைத்து வழிபட்ட நாளில், இலங்கைமாநகரிற் செங்கோல் செலுத்திய முதற் கயவாகு மன்னன், ஏனைய வேந்தரோடு அங்குப் போந்து வழிபட்டனன்'[24].

'இக்கயவாகு வஞ்சிநகர்க்கண் வந்திருந்த காலையில், செங்குட்டுவனுக்கு வயது ஐம்பது;[25] கயவாகுவோ, கி. பி. 113 முதல் 125 வரை இலங்கையில் அரசாண்டவன். இவன், தனது ஆட்சியின் பிற்பட்ட காலத்தே இமயவரம்பனைக் கண்டுசென்றனன் எனக் கொள்ளின், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் (125—50 = 75 கி. பி.),

22. சிலப்பதிகாரம், உரைப்பாட்டு மடை,—க—௫.

23. வஞ்சி—சேர இராஜதானி; ஒரு கொடியின் பெயராகிய வஞ்சியென்பது அதனை மிகுதியாக உடைய ஊர்க்குப் பெயராயிற்று—கருவூர்.

24. "பத்தினிக் கோட்டம் படிப்புறம் வகுத்து
* * * *
வலமுற மும்முறை வந்தனன் வணங்கி
உலக மன்னவன் நின்றோன் முன்னர்
அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்
பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்
குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்
கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்
எந்நாட் டாங்கண் இமய வரம்பனின்
நன்னாட் செய்த நாளணி வேள்வியுள்
வந்தீ கென்றே வணங்கினர் வேண்ட"—
சிலப்பதிகாரம், வரந்தருகாதை, கடுக—கசுரு.

25. "வையங் காவல் பூண்டநின் னல்யாண்
டையைந் திரட்டி சென்றதற் பின்னும்
அறக்கள வேள்வி செய்யா தியாங்கணு
மறக்கள வேள்வி செய்வோயாயினை."—
சிலப்பதிகாரம், நடுகற்காதை, கஉ௮—கரு௨.

கி. பி. எழுபத்தைந்திற் பிறந்தவனாதல் வேண்டும். இவன் மனைவி நற்சோணை கரிகாலன் மகளாதலால், கரிகாலன், சோலாதற்கு ஏறக்குறைய நாற்பது வருடங்களுக்கு முன்னர், அதாவது கி. பி. 35ஆம் ஆண்டிற் பிறந்தவன் ஆகற்பாலன்' என்பது.

மற்றொரு சாரார் சொல்வது.—

'சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகள் உரைப்பச் சாத்தனார் கேட்டனர் எனவும், மணிமேகலையை இளங்கோவடிகள் கேட்பச் சாத்தனார் கூறினர் எனவும், சிலப்பதிகாரப் பதிகத்தானும்[26] மணிமேகலைப் பதிகத்தானும்[27] உணரக் கிடத்தலால், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாகிய சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகளும், அதனொடு தொடர்நிலைச் செய்யுளாகிய மணிமேகலையைச் செய்தருளிய கூலவாணிகன் சாத்தனாரும் ஒரே காலத்து இருந்தவர் என்பது வெளிப்படை. இவ்விருவரும், தாம் இயற்றிய நூலின்கண், 'திருமாவளவன் புண்ணியத் திசைமுகம் போகிய அந்நாள்'[28] 'மன்னன் கரிகால் வளவன் நீங்கிய நாள்'[29] எனக் கூறுமாற்றால், கரிகாலன் இவ்விருவர்க்கும் முன்னிருந்தவன் என்றறியக் கிடத்தல் காண்க'.

---

26. "உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்
உரைசா லடிக ளருள மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்"—
சிலப்பதிகாரம், பதிகம் அஎ—அகூ.

27. "இளங்கோ வேந்த னருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
மாவண் டமிழ்த்திற மணிமே கலைத்துற
வாறைம் பாட்டினு ளறியவைத் தனனென"—
மணிமேகலை, பதிகம் கூகு—கூஅ.

28. "செருவெங் காதலிற் றிருமா வளவன்
வாளுங் குடையு மயிர்க்கண் முரசும்
நாளொடு பெயர்த்து நண்ணார்ப் பெறுகவிம்
மண்ணக மருங்கினென் வலிகெழு தோளெனப்
புண்ணியத் திசைமுகம் போகிய வந்நாள்"—
சிலப்பதிகாரம், இந்திர விழவூரெடுத்த காதை, கூ௦—கூச.

29. "மன்னன் கரிகால் வளவ னீங்கிய நாள்
இந்நகர் போல்வதோ ரியல்பினதாகி"—
மணிமேகலை, விழாவறை காதை, ௩௯, ௪௦.

அன்றியும், சிலப்பதிகாரச் சரித்திரம் நடைபெற்றபோது கரிகாற்பெருவளத்தான் இருந்திருப்பின், அக்காலத்திருந்த ஏனைய வேந்தரை எடுத்துக் கூறிய இளங்கோவடிகள், இம் மன்னவர் பெருந்தகையை மாத்திரம் கூறுதிரார். அங்ஙனம் இவன் பெயர் கூறப்படாமையே, இவன் அக்காலத்தில் இருந்திலன் என்பதை வலியுறுத்தல் அறிக.

இனி, செங்குட்டுவன் சமைத்த கண்ணகிக் கோட்டத்தை (கோயிலை) வழிபட, இலங்கை வேந்தன் முதற்கயவாகு, வஞ்சி நகர்க்கண் வந்து அவனுடன் இருந்தமை யாவர்க்கும் உடன்பா டாகையால், கயவாகும், சேரன் செங்குட்டுவனும் ஒரே காலத்தினர் எனல் அமையும். இச் சேங்குட்டுவன் அரசு வீற்றிருந்த காலம் ஐம்பத்தை யாண்டென்பர்.[30] இவனைக், கயவாகு, தன் ஆட்சியின் இடைப்பட்ட காலமான கி. பி. 119இல் கண்டு சென்றனன் எனக் கொள்ளின், இவன் அரியணை ஏறிய காலம் கி. பி. 64ஆம் ஆண்டெனல் விளங்கும். இவன் தந்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஐம்பத்தெட்டு[31] யாண்டு செங்கோல் செலுத்தினேன். ஆதலால், நெடுஞ்சேரலாதன் கி. பி. 6ஆம் ஆண்டில் சிங்காதனம் ஏறினவன் ஆதல் வேண்டும். இவற்கு முன்னர்ச், சேரன் பெருஞ்சேரலிரும்பொறை பதினேழாண்டு[32] அரசுபுரிந்தமையின், இவன் (இரும்பொறை) அரசாளத் தொடங்கிய காலம் கி. மு. 11ஆம் ஆண்டென்ப துணரப்படும். இவன் தந்தை, செல்வக்கடுங்கோவாழி யாதன். இவன், இருபத்தையாண்டு[33] முறை புரிந்தவன்

---

30. பதிற்றுப்பத்து, ஐந்தாம்பத்து, "கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் ஐம்பத்தையாண்டு வீற்றிருந்தான்".

31. பதிற்றுப்பத்து, இரண்டாம்பத்து, "இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஐம்பத்தெட்டியாண்டு வீற்றிருந்தான்".

32. பதிற்றுப்பத்து, எட்டாம்பத்து, "தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை பதினேழியாண்டு வீற்றிருந்தான்".

33. பதிற்றுப்பத்து, ஏழாம்பத்து, "செல்வக் கடுங்கோவாழியாதன் இருபத்தையாண்டு வீற்றிருந்தான்".

எனவே, கி. மு. 36ஆம் ஆண்டில் கோல் கைக்கொண்டவன் என்பது துணியப்படும். இவற்குமுற்பட்டவன் சேரமான் பெருஞ்சேரலாதன். இவன், கரிகாற்பெருவளத்தானொடு பொருது புறப்புண் நாணி வடக்கிருந்தனன்[34] என்பது நன்கு புலனாகின்றமையின், கரிகால்வளவன், கி. மு. முதல் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்து அரசாளப் புகுந்தவனாகற்பாலன் என்பது'.

இனி, இவ்விருசாரார் கூறியவற்றையும் ஒப்பநாடி உண்மை காணுமிடத்துச், சிலப்பதிகாரம், உரைப்பாட்டுமடையில், இளங்கோவடிகள் கிளந்து கூறுது "ஞாயிற்றுச் சோழன் மகள்" எனக் கூறியாங்கே, அரும்பதவுரையாசிரியரும், அடியார்க்கு நல்லாரும், முறையே, 'சூரிய வங்கிசத்து ஓர் சோழன் மகள்' 'சோழன் மகள் நற்சோணை' என வாளா கூறிப்போயினரேயன்றிக், கரிகாலன் மகளெனக் கூறிற்றிலராகலானும், பதிற்றுப்பத்து, ஐந்தாம் பத்துப் பதிகத்தானே, நெடுஞ்சேரலாதன், சோழன் மணக்கிள்ளி மகளை மணந்து, செங்குட்டுவனைப் பயந்தனன் என்றறியக்கிடத்தலானும், 'ஞாயிற்றுச்சோழன் மகள்' என்னும் தொடர்க்குச் 'சூரியகுலத்துச் சோழன் மணக்கிள்ளி மகள்' எனப் பொருள்கோடற் பொருத்தமுடைத்தன்றிக், கரிகாலன் மகள் என யூகஞ்செய்தல் பொருந்தாமையறிக. இங்ஙனே, அடியார்க்கு நல்லார்க்கும் உடன்பாடென்பதை, அவர், சிலப்பதிகாரப் பதிகவுரையில், இளங்கோவடிகளின் துறவின் வரலாறுரைக்குமிடத்து, "இக்கதையைப் பதிற்றுப்பத்துள், அஞ்சாம்பத்தின் முடிவின்கண் 'வடவருட்கும்'[35] என்னும் கவியுள்ளும்,

---

34. "ஒண்படைக்,—
கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருதுபுண்ணாணிய சேரலாதன்
அழிகள மருங்கின் வாள்வடக் கிருந்தென".—
அகநானூறு, ருரு ; மாமூலர்.

35. "வடவ ருட்கும் வான்றோய் வெல்கொடிக்
குடவர் கோமான் நெடுஞ்சேர லாதற்குச்
சோழன் மணக்கிள்ளி யீன்ற மகன்

வாழ்த்தின்கண்ணும், வரந்தருகாதைக்கண்ணும் காண்க"
எனக் கூறிப்போந்தமையால் உணர்க.

அற்றேல், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மனைக்கிழத்தி, கரிகால்வளவன் மகள் அல்லள் எனினும் ஆகுக; அரங்கேற்றுக்காதை உரையில், அடியார்க்கு நல்லார், 'சோழன் கரிகாற் பெருவளத்தானுக்கு அவன் அவையரங்கேறிக் காட்டலைவிரும்பி' என்றுரைத்தலான், காப்பியத் தலைவனாகிய கோவலன்றன் காதற்பரத்தையாகிய மாதவியென்பவள், கரிகால் வளவனுக்கு அவன் அவையரங்கேறித் தன்னுடைக் காட்ட விரும்பினமை இனிது விளங்கிக்கிடப்பவும், சிலப்பதிகாரச் சரிதம் நடைபெற்றுழிப், புகார் நகர்க்கண் கரிகாலன் அரசுவீற்றிருந்திலன் எனல் யாங்ஙனம் எனில்? கூறுவாம். ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய சிலப்பதிகாரம், முடியுடைவேந்தர் மூவர்க்கும் உரிய புகார், மதுரை, வஞ்சியென்னும் மூன்று நகர்க்கண்ணும் நடைபெற்றதொரு கதையாகும். இம்மூன்றனுள், வஞ்சியில் நிகழ்ந்தனவற்றைக் குன்றக்குறவர் கூறத், தாமே நேரிற் கண்டறிந்தும், மதுரையினும், புகாரினும் நடந்தவற்றைக் கூலவாணிகன் சாத்தனை உள்ளிட்ட அறிஞர்வாய்க் கேட்டுணர்ந்தும், இளங்கோவடிகள் நூல் செய்தனர் என்றறியக் கிடத்தலின், அடிகள் காலமும், சிலப்பதிகாரக்கதை நிகழ்காலமும் ஒன்றாதல் அமையும். இவ் அடிகளோ என்றால், குமரிமுதல் இமயம் வரை ஆணை செல்ல அவனியை யாண்ட சேரலாதன் மக்களுள், அரசுரிமை எய்துதற்குரிய இளங்கோவாக இருந்தவர். தமிழகத் தரசராகிய இவர், தம் காலத்திருந்த தமிழ்நாட்டரசர் எல்லோரையும் ஏனையோரினும் நன்கு அறிந்தவராதல் ஒருதலை. அந்தந்த நகரில் நிகழ்ந்தன

---

கடவுட் பத்தினிக் கற்கோள் வேண்டி
*　*　*
*　*　*
கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன்"—
ஐந்தாம்பத்து பதிகம்.

மகாமகோபாத்தியாய டாக்டர். உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்.

வற்றைக் கூறுமுகத்தானே, அவ்வக்காண்டத்திறுதிக் கட்டுரைக்கண், அக்காலத்தில் ஆங்காங்கு ஆட்சிபுரிந்தவராகிய அரசர்களையும், அன்னவர் சிறப்பினையும், சிறிதும் விடாதுரைத்துச் செல்லுங் கடப்பாடுடையவர்.

இவர் அன்னராதல், மதுரைக் காண்டத்து இறுதிக் கட்டுரைக்கண், பாண்டியன் நெடுஞ்செழியனையும்,[36] வஞ்சிக்காண்டத்து இறுதிப் பதிகத்திற், சேரன் செங்குட்டுவனையும்[37] கிளந்தெடுத் தோதிய வாற்றால் இனிது விளங்குகின்றது. இவ்வா றோதிய அடிகள், பாட்டுடைத் தலைவன் பிறப்பிடமாகிய புகார்காண்டத்து இறுதிக்கட்டுரைக்கண்,[38] அரசர் பெயர் எதனையும் விதந்து கூறாது பொதுப்படக் கூறியிருத்தலே, அக்காலத்து இவன் இருந்திலன் என்பதற்குத் தக்க சான்றாகும். அன்றியும், "திருமாவளவன் புண்ணியத் திசைமுகம் போகிய

---

36. " வடவாரியர் படைகடந்து
தென்றமிழ்நா டொருங்குகாணப்
புரைதீர் கற்பிற் றேவி தன்னுடன்
அரசு கட்டிலிற் றுஞ்சிய பாண்டியன்
நெடுஞ்செழியனோ டொரு பரிசா
நோக்கிக் கிடந்த
மதுரைக் காண்ட முற்றிற்று "

மதுரைக்காண்டம், இறுதிக்கட்டுரை, கச—உ௦

37. " புறத்துறை மருங்கி னறத்தொடு பொருந்திய
மறத்துறை முடித்த வாய்வாட் டானையொடு
பொங்கிரும் பரப்பிற் கடல்பிறக் கோட்டிக்
கங்கைப் பேர்யாற் றுக்கரை போகிய
செங்குட்டுவனோ டொருபரிசு நோக்கிக்
கிடந்த வஞ்சிக்காண்ட முற்றிற்று "—

வஞ்சிக்காண்டம், இறுதிக்கட்டுரை, க௦—கரு.

38. " முடியுடை வேந்தர் மூவ ருள்ளுந்
தொடிவிளங்கு தடக்கைச் சோழர்குலத் துதித்தோர்
அறனு மறனு மாற்றலு மவர்தம்
பழவிறன் மூதூர்ப் பண்புமேம் படுதலும்
* * * *
ஒரு பரிசா நோக்கிக் கிடந்த
புகார்காண்ட முற்றிற்று "—

புகார்காண்டம், இறுதிக்கட்டுரை.

வந்நாள்"[39] "கரிகால் வளவன் நீங்கிய நாள்"[40] "கரிகால் வளவன் தண்பதங்கொள்ளும் தலைநாட்போல"[41] எனக் கரிகாலன் செய்கைகளும் இறந்தகாலத்தாற் கூறப்பட்டிருத்தலும், இவன் அற்றை நாளையில் இருந்திலன் என்பதை வலியுறுத்தும். இன்னும் பத்தினிக்கடவுட்குச், சேரன் செங்குட்டுவன் வஞ்சி நகர்க்கண் கோட்டம் அமைத்து திருவிழா எடுத்தமை கண்டு, தத்தம் நகர்க்கண்ணும் அவ்வாறே அவள்பொருட்டு விழா நடாத்திய வேந்தரைக் கூறுமிடத்தும், இவன் பெயர் கூறப்படாமல், உறையூர்க்கண், சோழன் பெருங்கிள்ளிப்[42] பெயரே கூறப்பட்டிருத்தலும், அந்நாளில் இவன் இருந்திலன் எனற்கு சாட்சியாகும்.

இவையன்றி; இலங்கையரசன் முதற்கயவாகு, நள்ளிருள் யாமத்து நகர்சோதனை செய்துவருகின்றபோது, நரைத்த முதுமகள் ஒருத்தி பெருங்குரற்பாய்ச்சி அழக்கண்டு, அன்னவள் இன்னலுக்கு ஏது, "பன்னெடு நாளைக்கு முன்னர்ப் படையெடுத்துப் போந்த கரிகால் வளவன், சிங்களக்குடிகள் பலவற்றைச் சிறைப்படுத்துச் சென்ற ஞான்று தன்குடிக்கு ஒரு மகனையும் தான் கொண்டு போயினமையே" எனக் கேட்டுச், சோணாட்டின்மீது படையெடுத்து வந்து தன்னகர்க்குடிகளைச் சிறையினின்று விடுவித்தனன் என்று, இலங்கைச் சரித்திரம்[43] கூறுமாற்றால், கரிகாலன், கயவாகுவின் காலத்திற்கு முன்னிருந்தவன் என்பது புலனாகின்றது. கயவாகுவும், செங்குட்டுவனும் ஒரு காலத்தினர் என்பது முன்னரே விளங்கிக் கிடத்தலின், செங்குட்டுவன் காலத்திற்கு முன்னிருந்தவன்

---

39. சிலப்பதிகாரம், இந்திர விழவூ ரெடுத்த காதை, கo—கச.
40. சிலப்பதிகாரம், கடலாடுகாதை, கடுக, கசo.
41. மணிமேகலை, விழாவறை காதை, ௬க, சo.
42. "அது கேட்டுச் சோழன் பெருங்கிள்ளி கோழியகத்து
எத்திறத் தானும் வரந்தருமிவளோர்
பத்தினிக்கடவுளாகுமென நங்கைக்குப்
பத்தினிக்கோட்டமுஞ் சமைத்துநித்தல் விழாவணி நிகழ்வித்
தோனே".—
சிலப்பதிகாரம், உரைபெறு கட்டுரை, ச.
43. "Upham's Mahávamsam", Vol. I., pp. 228, 229.

கரிகாலன் எனல் சொல்லாமலே அமையும். இச் சிலப்பதிகாரக்கதை நடை பெற்றதாகும். இவற்கு ஒரு நூற்றாண்டிற்கு முன்னிருந்த கரிகாலனே, இச்சரிதம் நடைபெற்ற காலத்தில் இருந்தா னெனக் கோடற்கு ஒரு சிறிதும் இயைபின்மை அறிக. இதுகாறும் கூறியவாற்றால், கரிகால்வளவன், சேரன் செங் குட்டுவனுக்கு முன்னிருந்தவன் என்பது இனிது விளங் கும். இக்கரிகாலனோடு பொருது புறப்புண் நாணி வடக் கிருந்தவன் சேரன் பெருஞ்சேரலாதன். இவன், கி. மு. 36ஆம் வருஷத்தில் செங்கோலோச்சிய செல்வக் கடுங்கோ வாழியாதனுக்கு முற்பட்டவன். ஆதலால், சோழன் கரிகாற் பெருவளத்தான், கி. மு. முதல் நூற்றாண்டின் இடைப் பட்ட காலத்து அரசு கட்டில் ஏறினவன் எனக்கோடலே சால்புடைத்தாதல் காண்க.



## 3-வது அதிகாரம்.

# கரிகாலன் வரலாறு.[44]

இனிச், சோழர் மரபிலே 'கரிகாலன்' எனப் பெயர் பெற்றிருந்தோர், இதுகாறுங் கண்ட ஆராய்ச்சியில், நால்வர் காணப்படுகின்றனர். அவருள், பொருநராற்றுப்படை, பட்டினப்பாலைகட்குத் தலைவனும், சோழ பரம்பரையில் முன்னர்வைத் தெண்ணப்படும் தொன்மையுற்றவனுமாகிய கரிகாற்பெருவளத்தானே முதலவனுவான். இவனைத் திருமாவளவன் எனவும் கூறுவர். தஞ்சையின் கண்ணே பெரியகோயில் எடுப்பித்த இராஜராஜனுக்கு மூத்தோனும், இளம்பிராயத்திலே வீரபாண்டியனோடு போர்

---

44. "கரிகாலன்" என்னும் பெயர், முதற் கரிகாலனுக்கு, நெருப்பிற் கால் கரிகினமையின் உண்டான காரணப் பெயர் என்பது முன்னே விளங்கிக் கிடத்தலால், இதற்கு, யானை அல்லது யானைச் சேனைகளுக்கு நமன் எனவும், கரி தீற்றப்பெற்ற காலையுடையவன் எனவும் பொருள் கொண்டு, இக்காரணங்களில் ஒன்றை இவன் பெயர்க்குக் காரண மாக்குதல் பொருந்தாது. அது, பின்வருமாற்றால், மற்றையோர்க்கே யுரித்தென்பது விளங்கும்.

(i) பராந்தகன் மகனைப் பட்டத்து யானை எடுக்கமாட்டாமல் வருந்தியதைக் கண்ட முனிவரன், அரசன் மனைவியாகிய புவனமாதேவியை நோக்கி, "நின் மகன்காலில் கரியால் கோடு வரைக" என்றுரைப்பக் கேட்டு, அவளால் கரிக்கோடு தீற்றப்பெற்றமையின், ஆதித்தன் II. கரிகாலன் எனப் பெயர் பெற்றான்.

இதனை—

"அந்தணன் அவ்விடை அணுகு மெல்லையில்
தந்தியுந் துதிக்கரஞ் சலித்து நின்றது
சிந்தையின் உணர்ந்து 'இறைதேவியே! கரி
யிந்தனம் இவன்பதத் தெழுது' கென்றனன்.

புரிந்தோனுமாகிய ஆதித்தன் II. இரண்டாங் கரிகாலன்[45] ஆவான். வீரசோழியத்தைச் செய்வித்தோனாகிய இராஜ கேசரிவர்மன் வீரராஜேந்திரன் I. மூன்றாங் கரிகாலனாவான்.[46] கலிங்கத்துப் பரணி கொண்டவனும், பெரியபுராணம் பாடுவித்தவனுமாகிய முதலாங்குலோத்துங்கனை நான்காங் கரிகாலன்[47] என்பர். இன்னோரில் முன்னவனாகிய கரிகாற் பெருவளத்தானைப் பற்றியே யாம் ஆராயப் புகுகின்றே மாகலான், ஏனையோரைப் பற்றிய ஆராய்ச்சி ஈண்டைக் கில்லை என்க.

இனிச், சோழர்களுக்குக் கருவூர், உறையூர், தஞ்சை, திருவாரூர், காவிரிப்பூம்பட்டினம், காஞ்சி முதலியவை இராஜதானியாகக் கூறப்பட்டிருப்பினும், கரிகாலன், நெடுங் காலமளவும் உறையூர்க்கண்ணே[48] அரசுவீற்றிருந்து

---

கீறினள் பதத்தினிற் கிரியின் உச்சியில்
ஏறிய கதிரென எடுத்த தொண்கரி
வீறிய மத்தகமிசையிற் றோன்றினன்
தேறினள் சிவன்செய லென்று தேவியே".

"கழைச்சிலை இவன்கரி காலச் சோழன் என்றழைத்தனர்"— செவ்வந்திப் புராணம், உறையூரழிச் சுருக்கம் ௬௨, ௬௫, ௬௭-ம் செய்யுட்களில் காண்க.

(ii) முதற்குலோத்துங்கன் கலிங்கத்துப் பரணி கொண்டவன். 'பரணி' என்னும் பிரபந்தம் ஆயிரம் யானைகளை அமர்க்களத் திற் கொன்ற மானவனுக்கு வகுப்பது. இவனும், கலிங்கப் போரில் அநேக யானைகளுக்கும் யானைச்சேனைக்கும் காலனாக இருந்தமையின், கரிகாலன் எனப் பெயர் பெற்றனன், போலும்.

45. சோழ வமிச சரித்திரம், சோழ வமிச விருக்ஷம்.

46. *Vide* Introduction by M. R. Ry. Rai Bahadur V. Venkayya Avergal, M.A. to "**Some Mile-Stones in the History of Tamil Literature.**"

47. சோழ வமிச சரித்திரம்—பக்கம் ௨௭.

*N.B.*—வீரராஜேந்திரன் 'கரிகாலன் எனப் பெயர் பெற்ற காரணம்' விளங்கவில்லை.

48. "பிறங்கு நிலை மாடத்து உறந்தை போக்கி"—'விளங்குகின்ற நிலைகளமைந்த மாடங்களையுடைய உறந்தை என்னும் தன் னூரைப் போக்கி'— பட்டினப்பாலை, ௨௮௫.

பின்னர்க் காவிரிப்பூம்பட்டினத்தைத் தலைநகராக்கினன் என்றறியக்கிடத்தலின், இவன் அரசுரிமை எய்திய காலத்துச் சோழ ராஜதானியாக இருந்தது உறையூரேயாம். இவ் உறையூர்க்குக் கோழிநகர்[49] என ஒரு பெயர் வழங்கும்.

"ஊரெனப்படுவது உறையூர்" எனப் புலவர் புகழ்ந்துரைக்கும் உறந்தைமாநகரைச் சிறந்த இராஜதானியாகக்கொண்டு ஆட்சி புரிந்த சோழவேந்தருள், இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர், வீரத்தினுங் கொடையினுஞ் சிறந்தோனாய், உருவப்பஃறேர் இளஞ்சேட்சேன்னி என்பான் ஒருவன் இருந்தான். இவனை, இளையோன் எனவும் வழங்குவர். இளையோன் என்னும் பெயர் சொற்கிடந்த முறையே ஆராயுமிடத்து, இளவரசு எனப் பொருள்படுதலால், இவ் இளஞ்சேட்சென்னி, அரசுரிமை எய்தப்பெறாது, இளவரசாகவே[50] காலங் கழித்தவன் என்று கருதப்படுகின்றான். இவன் அழுந்தூர் வேள் மகளை மணந்து[51] இன்புற்றிருக்குநாளில் அவள் கருப்பமுற்றனள்.

அவ் அழுந்தூர் வேள்மகள், பத்து மாதமும் நிரம்பிப் பொறை யுயிர்த்தற்கு வருந்துகையில், அரசனது அவைக்களம்போந்த அடிகள் ஒருவர், "நமது இராசமாதேவியார் திருவயிற்றிலுள்ள குழவி சிறிது பொழுது தாழ்த்து நல்லோரையிற் பிறக்குமெனின் அரசர்க் கரசாகும்" என்றுரைப்பக் கேட்டுத், தன துயிர்க்கு இறுதியையும் நாடாது,

---

49. முற்காலத்து, ஓர் கோழி, நில முக்கியத்தால் யானையோடு போர் புரிந்து அதனைப் போர் தொலைத்தலால், அந்நிலத்திற் செய்த நகர்க்குக் கோழி என்பது பெயராயிற்று.

இதனை—

"முறஞ்செவி வாரணம் முன்சம முருக்கிய
புறஞ்சிறை வாரணம் புக்கனர்"—

என்னும் சிலப்பதிகாரம், நாடுகாண்காதை ௨௪௮, ௨௪௯ அடிகளிற் காண்க.

50. "The Chola Empire in South India" by Mr. Krishnaswami Aiyangar, M.A., M.R.A.S.

51. தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல் ௩௦-ம் சூத்திரவுரை.

நன்முகூர்த்தம் வருமளவும் தாங்கிவைத்துக் கரிகாலனை ஈன்றெடுத்தனள்.[52]

இனிக், கரிகாலன் இளம்பிறையென நாளுக்கு நாளும் வளர்வுற்றுப், பல்கலையும் நிரம்பப் பெற்றுப் படைக்கலம் பயின்று, இளம்பருவத்தனா யிருக்கையில், இவன் தந்தை,

---

52. "தாய்வயிற்றிருந்து தாயம் எய்திப் பிறந்து—அதாவது, தான் பிறக்கின்ற காலத்துப் பிறவாதே, நல்ல முகூர்த்தம் வருமளவும் தாயுடைய வயிற்றிலே இருந்து, அரசுரிமையைப் பெற்றுப் பிறந்து"—பொருநராற்றுப்படை., கஙஉ.

இதே விஷயம் :—

"குழையார் தோளி கமலவதி தன்பாற் கருப்ப
நாணிரம்பி
விழையார் மகவு பெறவடுத்த வேலை யதனிற்
காலமுணர்
பழையா ரொருநா ழிகைகழித்துப் பிறக்கு மேலிப்
பசுங்குழவி
யுழையார் புவன மொருமூன்று மளிக்கு மென்ன
வொள்ளிழையார்—(கூ)

பிறவா தொருநா ழிகைகழித்தென் பிள்ளை பிறக்கும்
பரிசென்கா
லுறவார்த் தெடுத்துத் தூக்குமென வுற்ற செயன்மற்
றதுமுற்றி
யறவா ணர்கள்சொல் லியகால மணையப் பிணிவிட்
டருமணியை
யிறவா தொழிவாள் பெற்றெடுத்தென் கோச்செங் கண்ணு
னேவென்றாள்"—(கo)

எனப் பெரியபுராணத்தில், கோச்செங்கட் சோழ நாயனார் புராணத்துக் கோச்செங்கட் சோழர்க்கும்,

திரிபுவ னப்பெருந் தேவி யேயினம்
ஒருகடி கையிற்பொறை யுயிர்த்தி டாதுகொள்
பெருநல மெனச்சொலிப் பெயர்ந்து போயினன்
அரிவையுஞ் சரணமே லாக நின்றனள்.—(அo)

முற்றிழை முனிசொலு முகூர்த்தந் தன்னிலே
பெற்றனள் குழவியைப் பிறையை நேரென
* * * *
* * * *"—(அக)

எனச் சேவ்வந்திப்புராணத்தில், உறையூரழிந்த சருக்கத்துப் பராந்தகன் மகனுக்கும் சொல்லப்பட்டிருக்கிறது.

உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி[53] இறந்துபோயினன். இவனே அரியணை ஏறுதற்கு உரிமையுடையவனாக இருந்தும், அச்சமயத்து அங்கு நிகழ்ந்த உள்நாட்டுக் குழப்பமும், வெளிநாட்டுச் சண்டைகளும் இவன் முடிகவிக்கப்பெறுதற்குத் தடையா யிருந்தனவோ, அல்லது, இவனுயிர்க்குக் கேடுபயப்பனவாகத் தோன்றினவோ அறிந்திலேம், உடனே, இவன் உறையூரை விட்டுக் கருவூர்க் கோடி, அங்கு ஓரிடத்தும் நிலைத்திராமல் அலைந்து திரிவா னாயினன்.

இங்ஙனம், இவன், இளமைப்பருவத்தே முன்னலூற்றுத் தொன்னகர் நீத்துப் பன்னகரத்தும் அலைந்து திரிந்தமையே, பின்னர், எவ்வெவர் உள்ளத்தையும் செவ்விதின்

---

குறிப்பு :—இதனை ஆராயுமிடத்துப், புனைந்துரையெனக் காணப்படுகின்றதே யன்றி, உண்மையாகக் கோடற்கு இடமின்று. ஏனெனின், பிரசூத வாயுவானது, கருவுயிர்க்கு மாதர், நிற்கினும், இருக்கினும், கிடக்கினும், வேறு எந்நிலை மேவினும் மகவை வெளிப்படுத்தும் தன்மையது என்பதும், அதனைத் தடுத்திடின், தாய்க்கும் குழந்தைக்கும் இறுதி பயக்கும் என்பதும் மருத்துவ நூல் (Midwifery) வல்லோர் கண்டறிந்ததாகலால், பிறக்கின்ற காலத்திற் குழந்தையைப் பெறாமல், வேண்டுமளவும் தாங்கிவைத்துப் பெறுவது, எவர்க்கும் முடியாத காரியமேயாம். ஆனல், தாய்க்குப் பிரசூத வேதனை தொடங்கியபோது, அயலிற் சூழ்ந்துள்ளார், "இன்ன நல்லோரையில் இக்குழந்தை பிறக்குமெனின் நன்று" எனப் பகர்வது பெருவழக்கு. சிற்சில அமயத்து, இவர்கள் கருதிய நேரமும் குழந்தை பிறக்குங் காலமும் "காகதாலிய நியாயம்போல்" தம்மில் வந்தியைவதும் உண்டு. அங்ஙனம் நேர்ந்த இதனை, இங்ஙனம் புனைந்துரைத்தனர் போலும்.

இக்கரிகாலன், நெடுநாளைக்குப் பின்னரேயே தன் அரசுரிமையை எய்தப்பெற்றனன் என்பது விளங்கிக்கிடத்தலால், "தாய்வயிற்று இருந்து தாயம் எய்திப் பிறந்து" என்பதற்கு "தொழுது எழுவார்" என்றதை "எழுந்து தொழுவார்" எனப்பொருள் கொண்டாங்கு, "தாய்வயிற்றிருந்து பிறந்து பின்னர்த் தாயம் எய்தி" எனப்பொருள் கோடல் நேரிதாகக் காண்கின்றது.

53. "உருவப்பஃறேர் இளையோன் சிறுவன்"—
பொருநராற்றுப்படை, ௧௩௦.

உணர்ந்து, அவ்வவர்க்கு ஆவன புரியும் அறிவு முதிர்ச்சி யுற்று, மேம்பாடுறுவதற்குக் காரணமா யிருந்தது.

இங்ஙனம், கரிகாலன் கருவூர்க்கண்ணே கரந்து திரிய, உறையூரிலே குழப்பம் குறைபடாதிருந்தமையால், அரசியற்கு உரியாரைத் தேர்தல் கூடாதிருந்தது. பண்டைக் கால வழக்கமேபோல், பட்டத்து யானையை விடுக்கத் தீர் மானித்துக், கழுமலத்து நின்ற களிற்றினைக் கட்டவிழ்த்து விட்டனர். அவ் யானையும், கருவூர்க்குச் சென்று, அங் கிருந்த கரிகாலன் மிகவும் இளம் பருவத்த னெனினும், அவனைத் தன்மிசை எடுத்துக்கொண்டு உறையூர்க்கு வந்து அரசியற்கு உரிமை செய்தது.[54]

இவ்வாறு களிற்றினாற் கொணர்வரப்பட்ட கரிகாலன் பல்லாற்றானும் பாராளுதற்கு உரிமையுடையவனாக இருந் தும், மனம் பொறாத தாயத்தார், புலிக்குருளையைக் கூட்டி லடைப்பவர் போல, இவனைச் சிறைக்கோட்டத்திட்டுக் காவல் புரிந்தனர்.

பகைவரால் சிறைக்களத்துக் காவல் செய்யப்பெற்ற கரிகாலனும், தன் பெருமைக் குணத்திற் சிறிதும் குறை பாடிலனாய்த், தனக்கு ஆங்காலத்தினை நோக்கியிருந்தனன். இவன் இங்ஙனம் இருப்ப, இவனை அணுகற் கஞ்சிய பகை வர், இவனிருந்த சிறைச்சாலையைத் தீக்கொளுவினர். அதனைக்கண்ட இவன், அரிமாக் குருளைபோல அஞ்சாத நெஞ்சத்தனாய்ப், பகைவர் கொளுவிய தீயையும், தன்னைச் செறித்திருந்த சிறைக்கள மதிலையும், ஓர் பொருட்படுத் தாது கடந்து வெளிப்போந்து, தன் மாமன் இரும்பிடர்த்

54. "கழுமலத்தில் யாத்த களிறுங் கருவூர்
விழுமியோன் மேற்சென்றதனால்"
என்னும் பழமொழிச் செய்யுளானும்,
"கழுமலமென்னும் ஊரின்கண்ணே பிணித்து நின்ற களிறும் கருவூரின்கண்ணே இருந்த கரிகால்வளவன் கடிது இளையனாயினும், அவன் சிறப்புடையனாதலால், அவன்மேற் சென்று தன்மிசை எடுத்துக்கொண்டு அரசியற் குரிமை செய்தது"
என்னும் அதன் உரையானும் உணர்க. கழுமலம் = சீகாழி.

தலையாரின் அருந்துணை பெற்று, வாளுறை கழித்து, எயிற் புறம் காவல் செய்திருந்த வாட்படைஞரைப் புறங்கண்டு, முன்னர்த், தன் வலியறியாது பகைத்து நின்றோர் பின்னர் அதனையறிந்து ஏவின செய்தொழுக அடக்கி, அரசுரிமையைக் கைக்கொண்டு, செங்கோலோச்சுவானாயினான்.[55]

காலமறிந்து கருமம் இயற்றலும், மனவன்மையும் தேக ஆற்றலும் ஒருங்கு பெற்ற இவ்வளவர் பெருமகன், பகைவர் கொளுவிய தீயைக் கடந்து, சிறைக்கோட்ட மதிலைத்தாண்டி வெளிவர முயன்ற காலையில், இவனது கால்கள் கரிந்து போயின. கால் கரிந்து போயினமையின் இவன், கரிகாலன் என்றழைக்கப்பெற்றான்.[56] இன்னவனது இயற்பெயர் விளங்கவில்லை.

---

குறிப்பு :—அரசியற் குரியாரைத் தேர்ந்து, பட்டத்து யானையின்மீது ஏற்றிக் கொணர்ந்தனர் எனற்பாலதை, யானையின் செய்கையாகப் புனைந்து கூறினர்.

55.

(i) " கோடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்குப்
பிறர்பிணி யகத்திருந்து பீடுகாழ் முற்றி
யருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு
நுண்ணிதி னுணர நாடி நண்ணார்
செறிவுடைத் திண்காப் பேறி வாள்கழித்
துருகெழு தாயம் ஊழின் எய்தி "—

பட்டினப்பாலை, உஉக—உஉள.

(ii) " சுடப்பட் டுயிருய்ந்த சோழன் மகனும்
பிடர்த்தலைப் பேரானைப் பெற்றுக்—கடைக்கால்
செயிரறு செங்கோல் செலீஇயினான் இல்லை
உயிருடையா ரெய்தா வினை "—

பழமொழி, சுடு.

56.

(i) " முச்சக் கரமு மளப்பதற்கு நீட்டியகால்
இச்சக் கரமே யளந்ததால்—செச்செய்
அரிகான்மேற் றேன்றொடுக்கும் ஆய்புனனீர் நாடன்
கரிகாலன் கானெருப் புற்று."—

பொருநராற்றுப்படை ஈற்றுச்செய்யுள்.

(ii) " இளமைப் பருவத்துப் பிறராற் சுடப்பட்டு உயிர்
உய்ந்துபோகிய கரிகாலன் "—

பழமொழியுரை.

தன் தந்தை அழுந்தூர் வேளிடத்து மகட்கொண்டாற் போல, இவனும், நாங்கூர்க் (சீகாழி தாலூகா) கண்ணே, வேளென உரிமையெய்தி வாழ்ந்திருந்த உழுவித்துண்ணும் வேளாளரிடத்துப் பெண் கொண்டனன்.[57] இந் நாங்கூர் வேள் மகளையன்றி வேறு பல மகளிரையும்[58] மணம் புணர்ந்து இன்புற்றிருந்தனன்.

இவனுக்குச், சேட்சென்னி நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, மாவளத்தான் என ஆண்மக்கள் மூவரும்,[59] ஆதிமந்தியார் என்னும் நல்லிசைப் புலமைவாய்ந்த மெல்லியள் ஒருவரும்[60] இருந்தனர்.

---

57. "வேளாளர், உழுதுண்போர் உழுவித்துண்போர் என்று இருவகையினர். அவருள், உழுவித்துண்போர் மண்டிலமாக்களுந் தண்டத்தலைவருமாய்ச் சோழநாட்டுப் பிடவூரும், அழுந்தூரும், நாங்கூரும், நாவூரும், ஆலஞ்சேரியும், பெருஞ்சிக்கலும், வல்லமும், கிழாரும் முதலிய பதியிற் றோன்றி வேளெனவும் அரசெனவும் உரிமை யெய்தினோரும், பாண்டியனாட்டுக் காவிதிப்பட்ட மெய்தினோரும், குறுமுடி குடிப்பிறந்தோர் முதலியோருமாய் முடியுடை வேந்தர்க்கு மகட்கொடைக்கு உரிய வேளாளராம்.

*    *    *    *    *    *    *

உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி அழுந்தூர் வேளிடை மகட்கோடலும் அவன் மகனாகிய கரிகாற் பெருவளத்தான் நாங்கூர் வேளிடை மகட்கோடலும் கூறுவர்".—

தொல்காப்பியம், பொருள் அதிகாரம், அகத்திணையியல் ௩௦-ம் சூத்திர விசேடவுரை.

58. "பொற்றொடிப் புதல்வர் ஓடி யாடவும்
முற்றிழை மகளிர் முகிழ்முலை திளைப்பவும்
செஞ்சாந்து சிதைந்த மார்பி னொண்பூண்
அரிமா வன்ன அணங்குடைத் துப்பின்
திருமாவளவன்"—

பட்டினப்பாலை ௨௯௫—௨௯௯.

59. Tamils 1800 years ago—**Chola's Genealogy**.

60. செந்தமிழ், தொகுதி ௨, பகுதி ௪, பக்கம் ௧௧௪.

இவ் ஆதிமந்தியாரை, சேரநாட்டு மன்னன் 'ஆட்டனத்தி' என்பவன் மணம் புரிந்தனன். இவ் விருவரும் கரிகால் வளவன் காண, கழார் முன்றுறையில், புதுப்புனல் விழவுக்குச் சென்று நீர் விளையாடுகையில், காவிரி அத்தியை

இக்கரிகாலனுக்கு மாலை [61] ஆத்தியாகும்; கொடியும், [62] இலச்சினையும் [63] புலியாம்.

---

வவ்விற்று. ஆதிமந்தி தம்காதலனைக் காணப் பெறாமையால், அக்காவிரி ஓடும் வழியெல்லாம் ஓடிக், கடல்மருங்கு சென்று கூவினின் றரற்றிப், பின்னர்த், தம் கணவனைக் காணப்பெற்றுத் தழுவிக்கொண்டு போந்தனர்.

இதனை—

(i) "ஈட்டெழிற் பொலிந்த ஏந்து குவவு மொய்ம்பின்
ஆட்டனத்தி நலனயந் துரைஇத்
தாழிருங் கதுப்பிற் காவிரி வவ்வலின்
மாதிரந் துழைஇமதி மருண்டிட ருழந்த
ஆதிமந்தி"—

அகம், உஉஉ.

(ii) "மலிபுனல் பொருத மருதோங்கு படப்பை
ஒலிகதிர்க் கழனிக் கழாஅர் முன்றுறைக்
கலிகொள் சுற்றமொடு கரிகால் காணத்
தண்பதங் கொண்டு விரிந்த இன்னிசை
யாணர் பொறிப்புனல் சேவடிப் புரளக்
கருங்கச் சியாத்த காண்பி னவ்வயிற்
றிரும்பொலம் பாண்டின் மணியொடு தெளிர்ப்பப்
புனனயந் தாடும் அத்தி யணிநயந்து
காவிரி கொண்டொளித் தாங்கு"—

அகம், நஎசு.

(iii) "மன்னன் கரிகால் வளவன்மகள் வஞ்சிக்கோன்
தன்னைப் புனல்கொள்ளத் தான்புனலின் பின்சென்று
கன்னவில் தோளாயோ வென்னக் கடல்வந்து
முன்னிருத்திக் காட்ட அவனைத் தழீஇக்கொண்டு
பொன்னங் கொடிபோலப் போதந்தாள்"—
வஞ்சினமாலை, கக—கரு என்பவற்றா லறிக.

குறிப்பு:—'கழாஅர்' என்பது மாயூரத்திற்குக் கிழக்கில் 'கேழார்' என வழங்குவ தோர் ஊர் என்பர். இதனை, முன்னர் 'மத்தி' என்னும் குறுநில மன்னன் ஆண்டுவந்தான்.

61. "கண்ஆர் கண்ணி கரிகால் வளவன்"—
பொருநராற்றுப்படை, கசஅ. ஆர் = ஆத்தி.

62. "இமையவ ருறையுஞ் சிமையப் பிடர்த்தலைக்
கோடுவரி யேற்றிக் கொள்கையிற் பெயர்வோன்"—
(கோடுவரி = புலி). இந்திர விழவூரெடுத்த காதை,
கஎ, கஅ.

63. "வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி"—
பட்டினப்பாலை, கநச, கநரு.

## 4-வது அதிகாரம்.

# கரிகால்வளவன் வெற்றி மேம்பாடு.

இனிக், கரிகால்வளவன், உள்நாட்டுக் குழப்பங்களை அறக்களைந்து, அரசுரிமையைக் கைக்கொண்ட பின்னர், வெளிநாட்டுக் கலகங்களை ஒழிக்க மனங்கொண்டனன். இவன், தான் முன்னிய பகையை முடித்தன்றிக், கோபந் தணியப் பெறாத, முருகனை [64] ஒத்த வீரருட் சிறந்த வீரன். ஒரு நாள், இவன், தமிழகம் முழுவதும் அடிப்படுத்தக் கருதிப் படையெடுத்துச் செல்கின்றபோது, சேரன் பெருஞ்சேரலாதன், பாண்டிய னொருவனையும், வேளிர் முதலிய குறுநில மன்னரையுந் துணைகொண்டு, வெண்ணி [65] என்னும் ஊர்ப்புறத்தே வந்து எதிர்த்திட, இவனும் போர் புரிவானாயினன். இதுவே, கரிகாலன் முதன்முதல் செய்த போரெனினும், இக்கன்னிப் போரிலேயே, அவ்விருபெரு வேந்தரையும் குறுநில மன்னரையும் வெந்நிட்டோட வென்று வாகை மிலைந்தனன்.

---

64. "முருகற் சீற்றத் துருகெழு குரிசில்"—
பொருநராற்றுப்படை, ௧௩௧.

65. (i) "இரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை
அரவாய் வேம்பி னங்குழைத் தெரியலும்
ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரும் ஒருகளத் தவிய
வெண்ணிற் றாக்கிய வெருவரு நோன்றாட்
கண்ணார் கண்ணிக் கரிகால்வளவன்"—
பொருநராற்றுப்படை ௧௪௩—௧௪௮.

வெண்ணியில் வெற்றிகொண்ட கரிகாலன், பகைவர்களின் மதில் சூழ்ந்த ஊர்களையும் பெரும்பாழ் செய்தும், கோபம் தணியாதவனாய்ச் செல்கின்றபோது, ஒன்பது மன்னர் ஒருங்குசேர்ந்து, வாகை [66] யெனப் பெயர்வாய்ந்த

---

(ii) "காய்சின மொய்ம்பிற் பெரும்பெயர்க் கரிகால்
ஆர்கலி நறவின் வெண்ணி வாயிற்
சீர்கெழு மன்னர் மறலிய ஞாட்பின்
இமிழிசை முரசம் பொருகளத் தொழியப்
பதினொரு வேளிரொடு வேந்தர் சாய
மொய்வலி யறுத்த ஞான்றைத்
தொய்யா வழுந்தூ ரார்ப்பினும் பெரிதே —

பரணர், அகம், கஉ[illegible].

(iii) "களியியல் யானைக் கரிகால் வளவ
சென்றமர் கடந்தநின் னாற்றல் தோன்ற
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலைப்
மிகப்புக ழுலக மெய்தி
புறப்புண் ணாணி வடக்கிருந் தோனே"—

வெண்ணிக்குயத்தியார், புறம் சுசு.

(iv) "கரிகால் வேந்தனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருதுபுண் ணாணிய சேரலாதன்
அழிகள மருங்கின் வாள்வடக் கிருந்தென"—

மாமூலர், அகம் ருரு.

இப்போர்க்களத்தில் தோல்வியுற்ற பாண்டியனும், வேளிரும் இன்னாரெனத் தெரிந்து கோடற்குப் போதுமான ஆதாரங் கிடைத்திலது. ஆனால், சேரமான் பெருஞ்சேரலாதன் போர்புரிந்தபோது, தன் மார்பு குறித்துக் கரிகாலன் விடுத்த அம்பு, மார்பைத் துளைத்து ஊடுருவி, முதுகினின்று வெளிப்பட்டமையால் உளதாகிய முதுகிற் புண்ணையும், புறப்புண்ணாகுமென்று நாணித், தன் கையிற் பிடித்த வாளோடு வடக்கிருந்து, பட்டினிகிடந்து உயிர்துறந்தனன். அற்றை நாளையில் முதுகிற் புண்படுதல் தோல்வியாக எண்ணப்பட்டு வந்தது.

இங்குக் கூறிய வெண்ணி என்பது, "நைவளர் கிள்ளி வெண்ணி சூழ்ந்த" என்னும் நற்றிணை ௩௯0-ம் செய்யுளால், சோணாட்டகத்தோர் ஊரெனத் தெரிகின்றது. இதனைத், தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள 'கோயில் வெண்ணி' என ஊகிக்கின்றனர்.

66. "செய்வினை மருங்கிற் சென்றோர் வல்வரின்
விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்

ஊர்ப்புறத்தே வந்து எதிர்த்திட்டனர். இவன், ' யாம் நமி யேமென்று கருதிப் பல அரசர்கள் வந்து பொருதிடினும் முதுகிடாது பொரக்கடவேம்' என வஞ்சினங்கூறி அவர் களைச் சிறிதும் மதியானாய்ப் போர்புரிவானாயினன். அப் பொழுது, அவ் ஒன்பது மன்னரும் எதிர்த்து நிற்க மாட் டாராய் வெண்கொற்றக்குடை ஒன்பதினையும் பொருகளத் தே போகட்டுப், பீடழிந்து ஓடினர். இவன், அதன் பின் னர், வாகைப் பறந்தலையைக் கையகன்று, அருவா (South Arcot) நாட்டின்மீது அணிவகுத்துச் சென்றனன்.

அருவா நாடென்பது, அருவாவடதலை, அருவா என இரு கூறுடையதாய், மாவிலங்கை என மறு பெயர் பூண்ட தாய், கச்சியைத் தனக்கு இராசதானியாகக் கொண்டதாய், புனல் நாடாகிய சோழநாட்டிற்கு வடக்கிருப்பது. இந் நாட்டில், ஓரிடத்தும் நிலையின்றி அலைந்து திரியும் குறும்பர் என்னும் ஓர் கொடிய சாதியார் வாழ்ந்து வந்தனர். அவர் களை அடக்கி ஓரிடத்து நிலைபெறச்[67] செய்ததன்றி, அன்னவர்

---

வெருவரு தானையொடு வேண்டுபுலத் திறுத்த
பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்
சூடா வாகைப் பறந்தலை யாடுபெற
ஒன்பது குடையும் நன்பக லொழித்த
பீடின் மன்னர் போல
ஓடுவை மன்னால் வாடை நீ யெமக்கே"—

பரணர், அகம், கஉ௬. இவ் வாகைப்பறந்தலை, இன்ன இடத்திலுள்ளதென்பதும், இதில் புறங் கொடுத்த மன்னர் ஒன்பதின்மரும் இன்னாரென்பதும் நன்கு புலனாகவில்லை.

67. (i) "செல்குடி நிறுத்த பெரும்பெயர்க் கரிகால்
வெல்போர்ச் சோழன்"—

அகம், நக்கீரர், கசக.

(ii) "தொல் அருவாளர் தொழில்கேட்ப"—

பட்டினப்பாலை உஎ௬.

நாட்டினையும் இருபத்து நான்கு கோட்டங்க[68]ளாகப் பகுத்து, அவற்றை வேளாளர்க்குக் கொடுத்து அங்குக் குடியேற்றினான்.

இவ்வாறு, இவன் அருவாளரை அடிப்படுத்த பின்னர், அவரது நாட்டினையும் சீர்திருத்தினான். அந் நாட்டின் தலைநகராகிய **கச்சியம் பதியிற் காமக்கோட்டத் திருப்பணி** செய்து வழிபட்டான். அப்பொழுது அக்கோயிலில் காவல் பூண்டிருந்த **சாத்தனார்,** இன்னவனது வழிபாட்டினைப் புகழ்ந்து தமது கையிலிருந்த **சேண்டு**[69] என்னும் ஆயுதத்தைத் தந்துதவினார். இச் செண்டுதான் இமயவரையை இவன் திரித்தகாலையில் கைக்கொண்டதென்பர்.

---

68. கோட்டங்கள் இருபத்து நான்காவன :—

1. ஆமூர் = Amur
2. இளங்காடு = Ilankadu
3. ஈக்காடு = Ekkadu
4. ஈத்தூர் = Eethoor
5. ஊற்றுக்காடு = Uttukkadu.
6. எயில் = Eyil
7. கடிகை = Kadikai
8. கலியூர் = Kaliyur
9. களத்தூர் = Kalathur
10. குன்றபத்திரம் = Kunrapathiram
11. சிறுகரை = Chirukarai
12. செங்காடு = Chenkadu
13. செந்திருக்கை = Chenthirukai
14. செம்பூர் = Chembur
15. தாமல் = Thamal
16. படுவூர் = Paduvur
17. பல்குன்றம் = Palkunram
18. புலால் = Pulal
19. புலியூர் = Puliyur
20. பேயூர் = Payur
21. மணவூர் = Manavur
22. வெண்குன்றம் = Venkunram
23. வேங்கடம் = Vengadam
24. வேலூர் = Velur

குறிப்பு :—செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள சேயூர், குன்றம்பேட்டை முதலிய இடங்களில் இக்காலத்து வாழும் முதலிமார்கள், தம்மைக், கரிகால் வளவனால் குடியேற்றம் பெற்ற வேளாளர் மரபைச் சார்ந்தவரெனச் சொல்லிக்கொள்கின்றனர்.

69. "கச்சி வளைக்கைச்சி காமக்கோட் டங்காவல்
மெச்சி யினிதிருக்கு மெய்ச்சாத்தன்—கைச்செண்டு
கம்பக் களிற்றுக் கரிகாற்பெருவளத்தான்
செம்பொற் கிரிதிரித்த செண்டு"—

சிலப்பதிகாரம், உரைமேற்கோள் பக்கம், கஅ.

அதற்குப் பிறகு, கரிகால்வளவன் வேங்கடத்திற்குச் (Modern Tirupathi, North Arcot Dt.) சென்றனன். இது, தமிழ்நாட்டின் வட எல்லையாக உள்ளது. இங்கு வாழ்வார் வடவராவார். வடக்கே வாழ்ந்தவராகிய இவர்கள் வடுகு வழங்கி வந்தமையின் வடுகர் என்றழைக்கப் பெற்றனர். (தமிழ்ச் சிதைவாகிய இவ்வடுகே, பின்னர்த் திரிந்து தெலுங்காயிற்று). இவ் வடுக அரசரை வென்ற தன்பின், அருவா நாட்டிற்கு வடக்கிலுள்ள மலையமா னாட்டை அடைந்தனன். இது, பெண்ணையாற்றங் கரைக் கண் உள்ள திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டது. இதனை ஆண்டிருந்த மலையமான், சோழரது ஆணைகடவாத சிற்றரசன் ஆதலால், அவனை விடுத்துப், பன்றிநாட்டிற்குச் சென்றனன். இப்பன்றி நாடென்பது, நாகப்பட்டினத்தைத் (Negapatam) தலைநகராகக் கொண்டு பாண்டி நாட்டிற்கு வடக்கிருப்பது. இதில், எயினரென்னும் ஓர் மரபினர் வாழ்ந்திருந்தனர். இவ் எயினருள், நாகர் என்னும் ஓர் வகுப்பினரும், அவருள் ஒளியர் எனப் பிறிதோர் வகுப்பினரும் இருந்தனர். இந் நாகருள், அரசராதற்குரியார் ஒளி நாகரே யாகலின், அவரையெல்லாம் வன்மை குன்ற அடக்கித், தென்பாண்டி நாட்டை அடைந்தனன். இது, தென்பாண்டி (Tinnevelly), பாண்டி (Madura), என்று இரு பகுப்பினதாய், அரணமைந்த தென்மதுரையைத் தலைநகராகக் கொண்டு சிறப்புற்றிருந்தது. இங்கிருந்த தென்னவனைத் திறல்கெடுத்திட்டுச், சேரநாடு நோக்கிச் செல்வானாயினன். இச் சேரநாடு பூழி (N. Malabar) குடம், (S. Malabar) குட்டம், (Cochin) வேணாடு, (Travancore) கற்கா, (Palaghat) என்னும் ஐந்து நாட்டினையும் தன்னுள் அடக்கி நிற்பதோர் நாடாகும். இவ் ஐந்தனுள், கற்கா வொழிய மற்றைய நான்கும், வடக்கிருந்து தெற்கு நோக்கி அரபிக்கடலோரத்தில் வரிசையாக அமைந்து கிடந்தன. கற்கா, குடத்திற்குக் கீழ்பாலிருந்தது. இத்தகைய சேர நாட்டிற்கு இராசதானி வஞ்சி. இந் நாட்டை ஆண்டிருந்த குடவரை (சேரமன்னவரை) வென்று மனவெழுச்சி

குறைந்திடுமாறு செய்தனன். பின்பு, முல்லை நிலங்கட்குத் தலைமை பூண்டிருந்த பொதுவர் (இடைக்) குலத்து அரசரை எல்லாம் அடியோடு ஒழித்தனன். இருங்கோ வேள் முதலிய ஐம்பெரு வேளிரையும் கிளையோடு சாய்த்தனன். இவ்வாறு இவன், இரவும் பகலும் எண்ணாது பகைவரை யெல்லாம் வென்று, தமிழகம் முழுவதும் தன்னடிப்படுத்தினான். [70]

இனி, தமிழக முழுவதும் வென்று அடக்கினமையின், தன்னோடு எதிர்த்துப் போர்செய்வாரைக் காணப்பெறாத கரிகாலன், போர்மேற் சென்ற தன் விருப்பம் குறைபடா மையாலே, வடதிசையிலேனும் பகைவரைப் பெறலாம்

---

70. " பல் ஒளியர் பணிபொடுங்கத்
தொல் அருவாளர் தொழில் கேட்ப
வடவர்வாடக் குடவர் கூம்பத்
தென்னவன் திறல்கெடச் சீறி மன்னர்
மன்னெயில் கதுவு மதனுடை நோன்றாள்
மாத்தானை மறமொய்ம்பிற்
செங்கண்ணாற் செயிர்த்து நோக்கிப்
புன்பொதுவர் வழிபொன்ற
இருங்கோவேள் மருங்குசாய "—

பட்டினப்பாலை உஎச—உஅஉ.

குறிப்பு :—' ஈண்டு ஒளியராவார் மற்றை மண்டலத்திற்கு அரசராதற் குரிய வேளாளர் ' என்பர், ஆசிரியர் நச்சினார்க்கினியர். வேளாளர்களை உயர்ந்த நிலையில் நிறுத்துதலிற் பெருநோக்க முற்ற கரிகால்வளவன், அவர்களை ஒடுக்கினான் எனல் பொருத்தமாகக் காணப்படவில்லை. ஆனால், நாகர் மரபில் எயினர், ஓவியர், ஒளியர், அருவாளர் எனப் பல பகுப்பினர் காணப்படுகின்றனர். இவர்களில், ஒளி நாகர், கி. பி. 11-ம் நூற்றுண்டளவும் மிக்க பராக்கிரமசாலிகளாக இருந்தனர் என்பது, அவர்கள், கி. பி. 1040 முதல் 1069 வரையும் ஆட்சிபுரிந்த இராஜேந்திர சோழதேவர் செங்கோல் கைக்கொண்ட ஒன்பதாம் ஆண்டில், மாமல்லபுரத்து வராகசுவாமிக்கு நிலதானங் கொடுத்திருக்கின்றதைப் பொறித்து வைத்துள்ள கல்வெட்டுச் சாசனத்தால் அறியக்கிடக்கின்றது. (*Vide* "Indian Antiquary, Vol. XXII, pp. 57). ஆதலால், ஒளியரை, வேளாளர் எனக் கொள்வதினும், ஒளிநாகர் எனக் கோடலே பொருத்தமுடைத்தாதல் காண்க.

எனக் கருதி, அத்திசையை நோக்கிச் சென்றனன். செல்கின்றபோது, இவனது எண்ணத்திற்கு மாறாக இமயமலை குறுக்கிட்டது. குறுக்கிடவே, 'என் ஆசை கெட இம்மலை விலக்கிற்று' எனக் கோபங்கொண்டவனாகி, முன்னமே, தான் சாத்தனிடம் பெற்றிருந்த செண்டுகொண்டு, அதனை அடித்துத் திரித்து, அதன் உச்சியில் தன் கொடியாகிய புலியை எழுதிக், கோபஞ் சிறிது தணியப்பெற்று மீண்டனன். 71

இங்ஙனம் மீண்டவன், சோணை (Son) * ஆற்றங்கரையிலுள்ள வச்சிரநாட்டை (Bundlekhand) வந்தடைந்தனன். அந்நாட்டு மன்னவன், இவனோடு பகைநட்பில்லாத அயலான் எனினும், தான் கொடுக்கக் கடமைப்பட்ட திறையாக முத்துப்பந்தரைக் கொடுத்தனன். அதனைப் பெற்று, அங்கு நின்றும் புறப்பட்டு மகதநாட்டைப் போயுற்றனன். அந்நாட்டரசன், இவனிடத்துப் பகைமை கொண்டு நெடுநேரம் போர்செய்தும் வெல்லமாட்டாமையாலே, பகையை நீக்கிக்

71. (i) " இருநில மருங்கிற் பொருநரைப் பெறாஅச்
செருவெங் காதலின் திருமா வளவன்
வாளுங் குடையு மயிர்க்கண் முரசு
நாளொடு பெயர்த்து நண்ணார்ப் பெறுகவிம்
மண்ணக மருங்கினென் வலிகெழு தோளெனப்
புண்ணியத் திசைமுகம் போகிய வந்நாள்
அசைவி லூக்கத்து நசைபிறக் கொழியப்
பகைவிலக் கியதிப் பயங்கெழு மலையென
இமையவ நுறையுஞ் சிமயப் பிடர்த்தலைக்
கொடுவரி யேற்றிக் கொள்கையிற் பெயர்வோன் "—
சிலப்பதிகாரம், இந்திர விழவூரெடுத்த காதை,
அகூ—கூஅ.

(ii) " செண்டு கொண்டுகரி காலனொரு காலிலிமயச்
சிமயமால்வரை திரித்தருளி மீளவதனைப்
பண்டு நின்றபடி நிற்கவிது வென்று முதுகிற்
பாய்பு லிப்பொறி குறித்தது மறித்த பொழுதே "—
கலிங்கத்துப்பரணி, இராசபாரம்பரியம்.

* பண்டல்கண்டு நகரையடுத்து உற்பத்தியாகி, பாடலிபுர (Patna) தருகில் கங்கையிற் கலக்கும் ஒரு உபநதி.

கொள்ளுதல் காரணமாகப், பட்டிமண்டபத்தைக் கொடுத்தனன். அதனைக் கைக்கொண்டு அவந்தி நகரை அடைந்திட, அந்நகரத்தரசன் இவனோடு நட்பாளன் ஆகையால் இவனது வருகைக்கு உவந்தவனாகி வாயிற்றோரணத்தைக் கொடுத்தனன்.[72]

இங்ஙனம், ஆரியமன்னர்பால் திறைகொண்டு தன்னாட்டை அடைந்த கரிகாலன், கடல் மீதினும் ஆணைசெலுத்துங் கருத்துடையவனாய், இலங்கைமீது படையெடுத்துச் சென்றனன். அங்கு, முதற்கயவாகுக்கு முற்பட்ட சிங்கள மன்னன் ஒருவன் ஆட்சிபுரிந்திருந்தனன். அவனை வென்று அந்நாட்டுப் பன்னீராயிரம் குடிகளைச் சிறைகொண்டு தன்னாடு வந்துசேர்ந்தனன்.

இனி, இவன்பால் பெருநட்புடையோன் பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி. இவனொடு வெண்ணிப் பறந்தலையில் பொருது புறப்புண் நாணி வடக்கிருந்தோன் சேரமான் பெருஞ்சேரலாதன். இவனைப் பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனாரால் பாடப்பெற்றோன் தொண்டைமான் இளந்திரையன். இவனால் தோல்வியுற்றோரும், இவற்குத் திறை அளந்தோரும், இலங்கையிற் சிங்கள வேந்தனும், வச்சிரம், அவந்தி, மகதம் என்னும் நாடுகளை ஆண்ட ஆரிய மன்னரும் என்ப. ஆதலால், பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும், சேரமான் பெருஞ்சேரலாதனும், தொண்டைமான் இளந்திரையனும், இலங்கையில் முதற்கயவாகுக்கு முற்பட்ட சிங்கள வேந்தனும், வச்சிரம், அவந்தி, மகதம் என்னும் நாடுகளை ஆட்சிபுரிந்த ஆரிய மன்னர்களும், இக் கரிகால் வளவனோடு ஒரே காலத் திருந்த அரசர்களாவார்.

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை - 600090.

---

72. "மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரும்
மகதநன் னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண் டபமும்
அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபிற் றோரண வாயிலும்"—
இந்திர விழவூரெடுத்த காதை, ௯௯—௧௦௪.

இச்சோழன் கரிகாலன், தமிழகம் முழுவதும் வென்று, வடதிசைச் சேறி, ஆரிய மன்னர்பால் திறைகொண்டு, இமயமலையிற் புலிக்கொடி எழுதி மீண்டமை அறியக் கிடத்தலானும், இவன் அடிப்படுத்த தமிழகத்தின் ஒரு கூறாகிய சேரநாடு, கன்னியாகுமரி (Cape Comorin) வரையினும் அகன்று கிடப்பதாகலானும், இவன் காலத்தில், சோழராஜ்யம் இமயமுதல் குமரியின் காறும் பரந்து மகோன்னத நிலையில் இருந்தது அறியத்தக்கது.



## 5-வது அதிகாரம்.

# கரிகாலன் இறைமாட்சி.

இனி, சோழன் கரிகாலன், செங்கோல் கைக்கொண்ட காலத்து இளம்பருவத்தன் எனினும், சமயத்திற் கேற்ற சாதுரிய புத்தியும், தீரா வழக்கையும் தீர்க்கவல்ல பேரறிவும், நடுநிலை தவறாமையும், பகை-கொலை-களவு கடிந்து சமாதான மேலிட நாடாட்சி செய்யும் வன்மையும் உடையவனாக விளங்கினான்.

ஒருநாள், இவன் அத்தாணி மண்டபத்தே அரசு வீற்றிருக் கையில், தம்முட் பகைமைகொண்டு முறைவேண்டி வருவார் இருவர், இவனை நெடுந்தூரத்தே கண்டனர். இவன் சிறுவனாக இருந்தமையின், ‘இவ் இளைஞனோ நாம் உரைக்கும் சொல்லின் முடிவுகண்டு நமக்கு முறைசெய்ய வல்லான்’ எனத், தம்மில் ஐயுற்று உரையாடி வருவாராயினர். அதனைக் குறிப்பா லுணர்ந்த இவன், அயலிலிருந்த அறையில் விரைவிற் புகுந்து, நரை முடித்து வந்து முன்போலவே சிங்காதனத்து அமர்ந்திருந்தனன். அப்பொழுது, அவ்விருவரும் அணுகி நோக்கியபோது, இவன் முதியோனாய் இருப்பக்கண்டு, மனமகிழ்ந்து தம் வழக்கினை உரைப்பாராயினர். அக்காலத்தில், அரசனுக் குதவியாக ஐம்பெருங்குழு[73] எனப்பெயர் பூண்ட ஐந்து அவைக்களங்கள் இருந்தன. அவற்றுள், ஒருவர்க்குரிய உரிமையை ஏனையோர் கைக்கொள்ளா வண்ணம் பாதுகாத்தற் பொருட்டு,

---

73. “சாந்துபூக் கச்சாடை பாக்கிலை கஞ்சுகநெய்
ஆய்ந்த இவரெண்மர் ஆயத்தோர்—வேந்தர்க்கு
மாசனம்பார்ப் பார்மருத்தர் வாழ்நிமித்த ரோடமைச்சர்
ஆசில் அவைக்களத்தார் ஐந்து”—

சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர் காட்டிய உரைமேற்கோள்.

நகரமக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற ஜனப்பிரதிநிதி (Representatives)களாகிய மாஜனங்களும், மதசம்பந்தமான சடங்குகளை நிறைவேற்றும் குருக்களாகிய (Priests) பார்ப்பாரும், அரசனும் குடிகளுமாகிய இவர்களின் சுகாதாரத்திற் கேற்றவைகளை எல்லாம் உற்றுநோக்கும் மருத்துவ (Doctors) ரும், நன்முகூர்த்தம் குறித்தலும், தெய்வத்தாலாவது மக்களாலாவது பின்னே நிகழும் தீமைகளை, உற்பாதத்தால், முன்னறிந்து காத்தலும் செய்யும் நிமித்தரும் (Astrologers), அரசிறைப் பொருளின் வரவு செலவுகளைக் கவனிப்போரும், அரசற் குறுதி சூழ்வோரும், மன்றத்திருந்து நீதி செலுத்துவோருமாகிய அமைச்சரும் (Ministers) குழீஇயிருப்பர். அரசனே, எல்லாக் காரியங்களையும் தானே செய்தற்குப் பெரிதும் உரிமையுடையன் எனினும், இவ் ஐம்பெருங்குழுவினேடு ஆலோசித்தும், நல்லிசைப் புலவரைத் துணைகொண்டும் அரசியல் நடாத்தும் வழக்கிருந்தது. ஆனால், இவ்விஷயத்தில் இவன் எவரோடும் உசாவிடாது, அம்முதியோர் சொல்லிய சொற்களை நன்கு ஆராய்ந்து, அனுபவமுதிர்ந்த நீதிபதியைப்போல, எவரும் வியந்திடுமாறு முறை செய்தனன்.[74]

74. (i) " உரைமுடிவு காணன் இளமையோ னென்ற
நரைமுது மக்க ளுவப்ப—நரைமுடித்துச்
சொல்லான் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமற் பாகம் படும் "—

(பழமொழி, உக).

என்பது " தம்முள் மறுதலையாயினர் இருவர் தமக்கு முறைமைசெய வேண்டிவந்து சில சொன்னல், அச்சொன்முடிவு கண்டே ஆராய்ந்து, முறைசெய்ய அறிவு நிரம்பாத இளமைப் பருவத்தான் என்றிகழ்ந்த நரைமுது மக்கள் உவக்கும் வகை, நரைமுடித்து வந்து, முறைவேண்டிவந்த இருதிறத்தாருஞ் சொல்லிய சொற்கொண்டே ஆராய்ந்தறிந்து முறை செய்தான், கரிகாற் பெருவளத்தான் என்னும் சோழன்; ஆதலால், தத்தம் குலத்துக்குத்தக்க விச்சைகள் கற்பதற்குமுன்னே செம்பாகம் உளவாம் என்றவாறு".

(ii) " இளமை நாணி முதுமை யெய்தி
உரைமுடிவு காட்டிய உரவோன் "— மணிமேகலை.

(iii) " முதியோர் அவைபுகு பொழுதிற்றம் பகைமுரண்
செலவும் "—

பொருநராற்றுப்படை, கஅஅ.

இவன் காலத்தில், காவிரிப்பூம்பட்டினத்தில், பலவகைப் பட்ட கோயில்களும்[75] அமண்பள்ளிகளும்,[76] பௌத்த மடங்களும் பிறவும் இடையூறின்றி விளக்கமுற்றிருந்தமை அறியக்கிடத்தலால், தமது ஆட்சிக்குட்பட்டவர்களைத் தாம் கைக்கொண்ட கொள்கை ஒன்றையே அனுட்டிக்குமாறு தண்டிக்கும் கொடுங்கோல் அரசரைப் போலாது, இவன், தன்கீழ் வாழ்வார் எவரும் தங்கள் தங்கள் மனதிற்கினிய சமயநெறியைச் சார்ந்தொழுகும் உரிமையை அளித்திருந்தனன் என்பது வெளியாதல் காண்க.

இன்னும், இவன் கீழ்க்குடிகள், மருவூர்ப்பாக்கத்தில் வாணிகங் காரணமாக வந்து குடியேறிய சோனகர், சீனர், சாவகரை உள்ளிட்ட புறநாட்டு மக்களோடு பகை சிறிதுமின்றிக் கலந்துறவாடிக்,[77] கொலைகடிந்து, களவுநீக்கி, நடுநிலைதவறாமல் வாய்மைமொழிந்து வாழ்ந்திருந்தனர்[78] என்பது இனிது விளங்கிக் கிடத்தலால், 'அரசன் எவ்விதம்

---

75. "நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வ மீறா
வேறுவேறு சிறப்பின் வேறு வேறு செய்வினை
யாறறி மரபி னறிந்தோர் செய்மின்"—

மணிமேகலை, விழாவறை காதை.

76. "அறவோர் பள்ளியு மறவோ ரம்பலமும்
புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத் தானமும்"—

சிலப்பதிகாரம் இந்திரவிழவூரெடுத்த காதை,
௧௭௯, ௧௮0.

77. "பல்லாய மொடு பதிபழகி
வேறுவே றுயர்ந்த முதுவா யொக்கற்
சாறயர் மூதூர் சென்றுதொக் காங்கு
மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம்"—

பட்டினப்பாலை, ௨௧௩—௨௧௮

78. (i) "கொலைகடிந்துங் களவுநீக்கியும்"—
... 

பட்டினப்பாலை, ௧௧௬—௧௧௯.

குடிகளும் அவ்விதம்' என்பதற்கேற்ப, குடிகளின் ஒழுக லாறு கொண்டு இவன் தன்மை உய்த்துணரக்கிடத்தல் காண்க.

இவ்வாறு, இவன் நீதிதவறாது அரசாட்சிபுரிந்து வந்தமையின், குடிகள் அதிகரித்தனர். குடிகள் அதிகரிப்பவே, நாட்டில் இடம் போதாதாயிற்று. ஆகவே, காடுகளையெல்லாம் வெட்டி, அக்காடுகளிருந்த இடங்களிலெல்லாம் நாடுகளை உண்டுபண்ணினன். நீர்நிலைகள் பலதொட்டு, நாட்டில் வளம் பெருக்கினன். கோயில் எடுத்தனன். ஞாயிலொடு மதிலெழுப்பி நகர்க்கு அரண் அமைத்துக் குடிகளை இடங்கடோறும் நிறுத்தினன்.[79]

இவ்வண்ணமாக நாட்டிற்கு நலம்புரிந்து வருகின்ற கரிகாலன், காவிரி நதிப்பெருக்கால் உண்டாகும் தீமையை மாற்றுதற்கும், வேளாண் வாழ்க்கையை விருத்திசெய்வதற்கும் யாது செய்வதென ஆராய்வானாயினன். ஆராய்ந்துழி, இவ்யாற்றிற்கு இரு மருங்கினும் கரை அமைத்தலை அல்லது வேறு வழி இல்லை எனத் தேர்ந்தனன். உடனே, இந்நதி எந்தெந்த ஊர்வழியாகச் செல்கின்றதோ, அந்தந்த ஊர் அரசர்க்கெல்லாம் கரைகட்டுவதற்குத் திருமுகம் விடுத்துப், பங்கு அளந்து கொடுக்க உத்திரவு செய்தனன். இவ்வாறு அளந்து கொடுக்கப்பட்டவர்களில்,

---

(ii) " கொடுமேழி நசையுழவர்
நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து "—

பட்டினப்பாலை, உ0௫—உ0அ.

79. " காடுகொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம் பெருக்கிக்
* * *
கோயிலொடு குடிநிறீஇ
வாயிலொடு புழையமைத்து
ஞாயிறொறும் புதைநிறீஇ "—

பட்டினப்பாலை, உஅ௩—உஅஅ.

பிரதாபருத்திரன்[80] என ஓர் அரசனும் இருந்தான். இவனும், மற்றைய மன்னரும், இலங்கை நகரத்துச் சிறைகளும் அரசன் ஆணையை மேற்கொண்டு கரைகட்டுவோராயினர்.

இவ்வாறு, மன்னரெல்லாம் தனது ஆணையை மேற்கொண்டு காவிரி நதியின் கரையைக் கட்டிமுடித்த[81] பிறகு,

---

80. இவனுக்கு நெற்றியிற் கண்ணிருந்தது (?) இவன், கரிகாலனது ஆணையை மேற்கொண்டு கரைகட்டாது, வாளா இருந்தனன். அதனையறிந்த அமைச்சர் முதலியோர், இவன் செய்கையைக் கரிகாலற் குணர்த்திட, அவனும், "அப் பிரதாபருத்திரனைப் படத்தில் எழுதி வருக" எனக் கட்டளையிட்டனன். ஏவியவாறு படம் எழுதிக்கொணர்ந்து திருமுன் வைக்கப்பட்டது. அதனை, வளவர் பெருமான் உற்று நோக்கி நெற்றியிற் கண்ணிருப்பக் கண்டு, 'இம் மிகைக் கண்ணே எமது ஆணையை இவன் பொருட்படுத்தாமைக்கு ஏதுவாதும்' எனச் சொல்லி, அக்கண்ணைத் தன் கைவேலாற் குத்தினன். உடனே பிரதாபருத்திரனது நெற்றிக்கண் மறைந்து போயிற்று. அஃதுணர்ந்த உருத்திரன், பெரிதும் அச்சமுற்று ஆணைக்கடங்கி ஏனையோரைப்போலக் கரைகட்டுவானாயினன் என்ப.

இதனை—

( செங்கோன்மை )

"கண்கொண்டான் பொன்னிக் கரைகட்ட வாரானை
எண்கொண்ட சோழன் இரங்கேசா—புண்கொண்ட
வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்"—

இரங்கேச வெண்பா, ருரு-ம் செய்யுளா லறிக.

குறிப்பு:—உருத்திரன் என்னும் தெய்வத்திற்கு நெற்றியிற்கண் கூறப்படுதல் போல, பெயர் ஒற்றுமை நோக்கி, இவற்கும் நெற்றிக்கண் கூறப்பட்டது போலும்.

81. (i) **The Epigraphist's Report, 1906,** Sec. 14. *Large Leyden Grant Arch.*

(ii) "தொழுது மன்னரே கரைசெய் பொன்னியிற்
றொடர வந்திலா முகரி யைப்படத்
தெழுது கென்றுகண் டிதுமி கைக்கணென்
றிங்க ழிக்கவே யங்க ழிந்ததும்"—

கலிங்கத்துப்பரணி.

கரிகாலன், பற்பல வாய்க்கால்களையும் *வடிமதகுகளையும் அமைத்திட்டுத், தண்ணீரை அழிவுறாமற் பாதுகாத்து, வேளாண் வாழ்க்கையைப் பெருக்கினான். பெருக்கவே, விதைத்த ஒன்று ஆயிரமாக விளைந்திட, நாடு வளம்படுவ தாயிற்று.[82] எகிப்து (Egypt) நாட்டை நயில் (Nile) நதியின் நன்கொடை என்றாற்போலச் சோழநாட் டைப் பொன்னிநதியின் நன்கொடையெனப் புலவர் புகழ்ந்துரைப்பா ராயினர். விவசாய விருத்திக்கு வேண்டிய வைகளைச் செய்து, நாட்டை வளம் படுத்திய இவற்கு நன்றி செலுத்தும் கடப்பாடு கொண்டனர் குடிகள். அவர் கள், தாம்கொண்ட நன்றிக்கு அறிகுறியாக, இவனைக்

---

(iii) "சென்னிப் புலியேறிருத்திக் கிரிதிரித்துப்
பொன்னிக் கரைகண்ட பூபதியும்"—

விக்கிரமச்சோழ னுலா.

(iv) ["தோக்கலியின் தொளாயிரத்துத் தொண்ணூற்றின்
மிக்க கரிகால் வேந்துதித்துத்—தக்கபொன்னி
யாறுகரை கண்டான்பின் ஆதொண்டை வேந்துகச்சி
யூருசென்றான் வேளாள ரோத்து."

"அஞ்சின் முடிபூண் டைம்பத்து மூன்றுவரை
கஞ்சிகா வேரி கரைகண்டு—தஞ்சையிலே
எண்பத்து மூன்றிலே டீரிரண்டு நாளிருந்தான்
நண்புறுமா தொண்டைமன் னன்றான்." ]

இவ்விரண்டு செய்யுட்களும் எனக்குக் கிடைத்த தொண்டை மண்டல சதக ஏட்டின் ஒரு புறத்தில் ஔவை பாட லென்றெழுதப் பெற்றிருந்தன.

82. (i) "கூனிக் குயத்தின் வாய்நெல் லரிந்து
சூடுகோ டாகப் பிறக்கி நாடொறுங்
குன்றெனக் குவைஇய குன்றாக் குப்பை
கடுந்தெற்று மூடையின் இடங்கெடக் கிடக்குஞ்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கும் நாடுகிழ வோன்"—

பொருநராற்றுப்படை, உசஉ—உசஅ.

'கரிகால்வளவன்' எனலை ஒழித்துக், 'கரிகாற் பெருவளத்தான்' என்று அழைப்பாராயினர். தம் நாடு வளம் எய்துவதற்கு ஏதுவாயிருந்த காவிரியைப் 'புண்ணியநதி' எனவும் 'பொன்னி' எனவும் கொண்டாடினர். இப் பொன்னி நதியால் வளமல்கிய சோணாட்டை அரசுபுரிந்தமையின், சோழர்கள், 'வளவர்' எனப் பெயர் பெற்றார்கள்.

---

(ii) "ஏரியும் ஏற்றத்தி னானும் பிறநாட்டு
வாரி சுரக்தும் வளனெல்லாந்—தேரின்
அரிகாலின் கீழகூஉம் அந்நெல்லே சாலுங்
கரிகாலன் காவிரிசூழ் நாடு"—

பொருநராற்றுப்படை.



## 6-வது அதிகாரம்.

# பெருவளத்தான் வாணிகத்துறையை வளம்படுத்தது.

இனி, கரிகாற் பெருவளத்தான், தன் குடைக்கீழ் வாழுவோர் செல்வத்தாலும் நாகரீகத்தாலும் மேம்படவேண்டும் என்பதிற் பெருநோக்கம் உற்றவன். நாடு மேன்மையடைதற்கு இன்றியமையாதன, வேளாண்மையும் வாணிகமும் என நன்குணர்ந்தவன். வேளாண் வாழ்க்கைக்கு வேண்டியவற்றை முன்னர்ச் செய்துமுடித்தமையின், வாணிகத்துறையை வளம்படுக்கும் வழியையும் ஆராய்ந்தனன். ஆராய்கின்றபோது, கடற்கரைக்கு நெடுந்தூரத்தில் இருக்கும் உறையூரை, இராசதானியாகக் கொள்வது, தன் எண்ணத்திற்கு மாறாகும் எனத் தோற்றவே, உறையூரை விடுத்துக், கடலை அடுத்துள்ள காவிரிப் பூம்பட்டினத்தைச் சீர்திருத்தி, இராசதானியாக்கொண்டு அங்கு வசிப்பானாயினன்.

இனி, காவிரிப்பூம்பட்டினம் என்பது காவிரிநதி கடலொடு கலக்கும் இடத்திலுள்ள ஒரு துறைமுகப்பட்டினம். காவிரியாற்றின் தொடர்புற்றுக் கடல் மருங்கிருந்தமையின், இந்நகர்க்கு இப்பெயர் உளதாயிற்று. இது, சீகாழியினின்று பதினான்கு மைலுக்கப்பால் உள்ளது. காகந்தன் என்னும் வேந்தன் ஒருவன், இங்கிருந்து முன்னர் அரசு

புரிந்தமையின், இது 'காகந்தி' எனப் பெயர் வாய்ந்திருந்தது. வங்காளத்தின் தலைநகராகிய சம்பாபதியினின்றும் வந்து குடியேறிய தமிழர்கள், தமது பழய நகரத்தை மறவாதிருத்தற்பொருட்டு, இதனைச் 'சம்பாபதி' என்றழைப்பாராயினர். பெரிப்ளஸ் 'கமாரம்' என்றும், டாலமி 'கபேரிஸ்' எனவும் கூறியது இந்த நகரையேயாம். இதற்குப் 'புகார்' எனவும் ஒரு பெயர் வழங்கும்.

இப் பட்டினத்திற்கு இடையிற் சென்ற காவிரியாறு, இற்றைநாளையிற் போலக் கிளைகள் பிரியப்பெறாது, மாக் கலங்களின் போக்குவரத்துக்கு இசைந்த வண்ணம் ஆழ்ந்து அகன்ற முகத்துவாரத்தை உடைத்தாயிருந்தது. இவ் யாற்றின் வடகரையில், கடலை அடுத்திருந்த காவிரிப் பூம்பட்டினம், பட்டினப்பாக்கம் எனவும், மருவூர்ப்பாக்கம் எனவும் இரண்டு கூறுகட் பகுக்கப் பெற்றிருந்தது. இவற்றுள், மருவூர்ப்பாக்கம் கடற்றுறைப்பக்கத்தும், பட்டினப் பாக்கம் இதற்கு மேல்பாலுமாக இருந்தது. இவ் இரு வகைப் பாக்கத்திற்கும் இடையில், சந்தை கூடுதற்கென்று, மரங்கள் வரிசை வரிசையாகப் பதிக்கப்பெற்று நிழல்பரந்த நீளிடை ஒன்றிருந்தது.

இவ் இருபாக்கங்களில், பட்டினப்பாக்கத்தே, அரச வீதியும், ஆவணவீதியும், கொடித்தேர்வீதியும் முக்கியமானவை. வணிகர், மறையவர், உழுவோர், ஆயுள்வேதியர், காலக்கணிதர் தனித்தனி மறுகும் இருந்தது. மகதச் சிற்பரும், மராடக் கோல்லரும், யவனத்தச்சரும் கூடிக் கண்ணைக் கவரும் வனப்புடன் செய்தமைத்த அரசன் கோயிலும் இங்குதான் அமைக்கப் பெற்றிருந்தது. இவ் அரண்மனையைச் சுற்றிலும் கடும்பரி கடவுநர், களிற்றின் பாகர், நெடுந்தேர் ஊருநர், கடுங்கண் மறவர் இருக்கைகள் இருந்தன. கவிவாணவர், துதிவாணவர், நாழிகைக்கணக்கர், பாணர், நடிகள், நகைவேழம்பர், மணிகுயிற்றுநர், வளைபோழுநர், மாலைதொடுப்போர் வாழும் இடங்களும் இருந்தன. கோட்டம், அம்பலம், மன்றம், அறவைச்

சோறிடுசாலை, வேள்விச்சாலை, கலைக்கழகம், சந்திரகுண்டம், சூரியகுண்டம், எந்திரவாவிகளும் ஈண்டு அமைக்கப்பெற்றிருந்தன.

இனி, கடற்கரை ஓரத்திலிருந்த மருவூர்ப்பாக்கத்தே, திசைமயங்கிச் செல்லும் கலங்களைத் திசைக்குறி காட்டி அழைக்கும் கலங்கரைவிளக்கம் (Light House) துறைமுகத்தருகே கட்டப்பட்டிருந்தது. கடல்வழியாக நாவாய்களிலே கொண்டுவரப்படும் பண்டங்களைத் தீர்வை வரையறுத்துக் கடமைகொள்ளும் ஆயத்துறைகளும் (Custom House) அமைக்கப்பட்டிருந்தன. சுங்கம் இறுத்த பின்னர், சோழவேந்தரின் அடையாள முத்திரையாகிய புலி இலச்சினை இட்ட பண்டப் பொதிகளைக்கொண்டு சேர்க்கும் பண்டசாலைகளும் (Ware House), கிடங்குகளும் (Godowns), உயர்ந்தமேடைகளும் (Docks and Piers) இருந்தன. இவற்றை யடுத்து, யவன சீன சாவக வியாபாரிகளின் மாளிகைகள் இருந்தன. சாலியரும், கூலவாணிகரும், பிட்டுவாணிகரும், அப்பவாணிகரும், கள் விற்போரும், பரதவரும், உமணரும், இலையமுதிடுவோரும் (வெற்றிலைவிற்போர்), பஞ்சவாசம் பகர்வோருமாகிய வணிகரும், வெண்கலக்கன்னார், செம்புசெய்குநர், மரங்கொல்தச்சர், கருங்கைக்கொல்லர், நன்கலந்தருநர், பொன்செய்கொல்லர், சித்திரகாரிகள், சிற்பாசாரிகள், துன்னர், சக்கிலியர், சீரையானும் கிடையானும் பூ, படிமை முதலியவற்றைச் செய்குநரை உள்ளிட்ட கைத்தொழில்வல்லாரும், துளைக்கருவி, நரப்புக்கருவிகளில் இசைமரபறிந்து இசைத்துக் காட்டவல்ல குழலர், பாணர் முதலிய இசைக்காரர்களும், பிறர் ஏவியதொன்றைச் செய்து உயிர்வாழும் கைவினையாளரும் இங்கு வாழ்ந்து [83] வந்தனர்.

இப்பாக்கத்து மறுகுகளில், பர்மா முதலிய அன்னிய தேசங்களினின்றும் கடல் வழியாக நாவாயிற் கொணர்ந்த குதிரைகளும், மலைநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட

83. இவற்றைச் சிலப்பதிகாரத்தும் மணிமேகலையினும் பார்க்கக் காண்க.

மிளகுபொதிகளும், இமயம், மேரு முதலிய வடமலைகளிற் பிறந்த மாணிக்கமும் பொன்னும், பொதியின் மலையிலே உண்டாகும் சந்தனமும் அகிலும், தென்கடலிலே குளித்த முத்தும், கீழ்கடலில் எடுத்த பவளமும், கங்கைக்கரையில் அகப்படும் யானை, பொன், மணி முத்துக்களும், காவிரிப் பாய்ச்சலால் உண்டாகும் பொருள்களும், இலங்கையி லிருந்து கொணர்ந்த உணப்பொருளும், காழகத்தில் **(Burma)** உண்டான நுகர்ச்சிப் பொருள்களும், சீனம் முதலிய இடங்களினின்றும் கொணர்ந்த பட்டும், பனிநீரும், குங்குமப்பூவும், கருப்பூரமும், பற்பல துகில் வகைகளும் தொகுக்கப்பெற்று விலை [84] செய்யப்பட்டன.

---

84. " நீரின் வந்த நிமிர்பரிப் புரவியுங்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெளிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு "—

பட்டினப்பாலை கஅரு—கஙஎ.

[ இன்னும் சிலப்பதிகாரம் ஊர்காண் காதை உரையில் கூறப்பட்டுள்ள அருமணவாளன், தக்கோலி, கிடாரவன், காரகில் என்று சொல்லப்பட்ட அகில்தோதகியும், கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்டுகில், சுண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர், கோபம், சித்திரக்கம்பி, குருதி, கரியல், பேடகம், பரியட்டக்காசு, வேதங்கம், புங்கர்க்காழகம், சில்லிகை, தூரியம், பங்கம், தத்தியம், வண்ணடை, கவற்றுமடி, நூல் யாப்பு, திருக்கு, தேவாங்கு, பொன்னெழுத்து, குச்சரி, தேவகிரி, காத்தூலம், இறஞ்சி, வெண்பொத்தி, செம்பொத்தி, பணிப்பொத்தி என்று சொல்லப்பட்ட துகில்தோதகியும், மலையாரம், தீமுரண்பச்சை, கிழான்பச்சை, பச்சைவெட்டை, அரிசந்தனம், வேர், சுக்கொடி, என்று சொல்லப்பட்ட ஆரத் தோதகியும், அம்பரேச்சம், கத்தூரி, சவாது, சாந்து, குங்குமம், பனிநீர், புழுகு, தக்கோலம், நாகப்பூ, இலவங்கம், சாதிக்காய், வசுவாசி, நிரியாசம், தைலம் என்று சொல்லப்பட்ட வாசத்தோதகியும், மலைச்சரக்கு, தூலை, அடைவுசரக்கு, மார்பு, இளமார்பு, ஆரூர்க்கால், கையொட்டுக்கால், மார்ப்பற்று, வராசான், குமடெறிவான், உருக்குருக்கு, வாரோசு, சூடன்,

இன்னும், இப்பாக்கத்தே, பலவகைக் கூலங்களும் குவித்த மறுகில், தாம் விற்கும் பண்டங்கள் இன்னவை என்பதை வாயாற் கூறிடாமல், ஒவ்வொரு அடையாளக் கொடியாற் குறித்து[85] வந்தனர்.

இனி, இந்தப்பாகத்தின்கண் பண்டசாலை முற்றத்தில், வியாபாரிகள், தம்பெயர், பண்டங்களின் நிறை, அளவு, எண் என்பவற்றை எழுதிப் போகட்ட பொதிகளை,[86] சுங்கம் கொள்வோர் நிறை கண்டு கடமை வரையறுத்து, அவற்றில் அரசன் முத்திரையாகிய புலி இலச்சினையிட்டுச் சுங்கங் கொண்டு, நாவாயில் வந்தனவற்றைக் கடலினின்று கரையில் இறக்குதலும், கரையிலே கிடந்தபொருளை மரக்கலத்தில் ஏற்றுதலும் செய்திடுமாறு, ஏற்றுமதி இறக்குமதிகள் ஓய்வின்றி நடைபெற்று[87] வந்தன. ஏற்றுமதி

சீனச்சூடன், என்று சொல்லப்பட்ட கருப்பூரத்தோதுதியும் அக்காலத்தில் உள்நாடு புறநாடுகளினின்றும் கொண்டுவரப்பெற்று விலை செய்யப்பட்டு வந்தன. இவற்றின் பெயர்கூட இற்றைநாளிற் கேட்கப்பெறுமை பெரிதும் விசனிக்கத்தக்கதேயாம்.]

85. "கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
வேலை வாலுகத்து விரிதிரைப் பரப்பிற்
கூல மறுகிற் கொடியெடுத்து நுவலும்
மாலைச் சேரி"—

சிலப்பதிகாரம் கடலாடுகாதை கஙo—கஙரு.

86 "வம்ப மாக்கள் தம்பெயர் பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பலபொதி"—

சிலப்பதி காரம், இந்திரவிழவூரெடுத்தகாதை—கககூ—ககஉ.

87. "நல்லிறைவன் பொருள் காக்குந்
தொல்லிசைத் தொழின்மாக்கள்
காய்சினத்த கதிர்ச்செல்வன்
தேர்பூண்ட மாஅபோல
வைகல்தொறும் அசைவின்றி
உல்குசெயக் குறைபடாது
வான்முகந்தநீர் மலைப்பொழியவும்
மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவும்
மாரிபெய்யும் பருவம்போல
நீரினின்று நிலத்தேறவும்
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்

இறக்குமதிகள் இரவும் பகலும் இடைவிடாது நடைபெற்று வந்தமையின், காவிரிப்பூம்பட்டினம், அற்றை நாளையில் மிகப்பெரியதோர் வாணிக நகரமாகச் சிறந்து விளங்குவதாயிற்று. வாணிகம் சிறக்கவே, நகரமக்கள் செல்வத்தாலும் நாகரீகத்தாலும் மேம்பாடெய்துவாராயினர். குடிகளின் உயர்ச்சியே கோன் உயர்தற்கு ஏதுவாகலான், கரிகாற் பெருவளத்தானும், பலதுறையால் வருவாய் பெருகத், திருவிற் சிறந்த ஒருவனாயினன். இக்காரணத்தால் இவனைத் 'திருமாவளவன்' என உலகம் மீக்கூறு[88] வதாயிற்று.

பற்பல தேயத்துத் தொழில் வல்லாரையும் தன்னகரிற் குடியேற்றுதல், வாணிகத்துறையை வளம்படுத்தற்கு வழியெனவும், வாணிகமே, செல்வம் பெருக்கமுறுதற்குக் காரணமெனவும், அவ்வாணிகத்திற்கு இன்றியமையாது வேண்டப்படும் ஏற்றுமதி இறக்குமதிகள் இடையின்றி நடைபெறுதற்குக், கடற்கரையோரத்துள்ள நகரை இராசதானியாகக் கோடலே தக்கதெனவும் இற்றைக்கு இரண்டாயிரம் வருடத்திற்கு முன்னரேயே இத் 'திருமாவளவன்' அறிந்து கைக்கொண்டமை, பெரிதும் பாராட்டற்பாலதாம்.

---

வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்
பொதி மூடை"—

பட்டினப்பாலை கஉ0—கஙஎ.

88. (i) "அரிமா சுமந்த அமளிமே லானைத்
திருமா வளவன் எனத் தேறேன்"—
பொருநராற்றுப்படை.

(ii) "திருமாவளவன் தெவ்வர்க் கோக்கிய வேல்"—
பட்டினப்பாலை உகக.

(iii) "செருவெங் காதலில் திருமாவளவன்"—
சிலப்பதிகாரம், இந்திரவிழவூ ரெடுத்தகாதை

இன்னும், இவனது இராசதானியாகிய காவிரிப்பூம்பட்டினத்தில், "நிறைக்குறின் நிறைத்துப் போக்குறிற் போக்கும்—பொறிப்படை யமைந்த பொங்கில வந்திகை" என்னும் யந்திரவாவி, கலங்கரை விளக்கம், ஆயத்துறை, கொடியெடுத்து நுவலல், முதலியவை இருந்தமை அறியக் கிடத்தலின், இத்திருமாவளவன், நாட்டினை வளம்படுக்கும் வகையினையும், நகரைச் சீர்திருத்திச் செல்வம்பெருக்கும் முறையினையும் அறிந்திருந்ததுமன்றி, நாகரீகச் செய்கைகளையும் நன்குணர்ந்தவன் என்பது விளங்கி நிற்றல் காண்க.



## 7-வது அதிகாரம்.

# திருமாவளவன் காலத்திற் செந்தமிழ் நிலைமை.

இனி, நாகரீகம் அதிகரித்திருக்கும் நாட்டின்கண் கல்வி உன்னத நிலையில் இருப்பது பெருவழக்கு. இத் திருமாவளவன் காலத்திலோ, தமிழ்நாட்டின்கண் செல்வமும், நாகரீகமும் ஒருங்கே செழிப்புற்றிருந்தன. ஆதலால், கல்வி எந்நிலையில் இருந்ததெனத் தெரிந்துகொள்வதும் இன்றியமையாததேயாம். இவன், கல்வியின் அருமை பெருமைகளை நன்கு தேர்ந்தவன்; கற்ற அறிஞரைத் துணைகோடலும், அவர் சொற்றவறாது நடத்தலும், அவர்க்கு வேண்டுவ புரிந்து பாதுகாத்தலும், அவர்கள் இயற்றிடும் நூல்களைப் பரிசில் அளித்து ஏற்று நன்கு மதித்தலும், கலைக்கழகங்களை ஏற்படுத்தலும், வறிய புலவர் தலைப்படின், 'கல்விக்குப் பகை வறுமை' எனக் கடைப் பிடித்து அவரைப்பற்றிய வறுமைநோய் அகன்றொழியப் பெரும்பொருள் வழங்குதலும், மதம், குலம் முதலிய வேற்றுமையின்றி ஆண்மக்களைப் போலவே பெண்மக் களைக் கல்வி பயிற்றுதலும், கல்வி அபிவிர்த்திக்காம் வழி யெனக் கைக்கொண்டிருந்தனன்.

இவன், தன்மாமன் இரும்பிடர்த் தலையார் என்னும் பெரும்புலவரை நீங்காத்துணை யெனக் கொண்டு 89

89. பழமொழி க௫-ம், செய்யுளும், அதன் உரையும்.

செங்கோல் செலுத்தி வந்தான். பரணர்,[90][1] நக்கீரர்,[2] மாமூலர்,[3] உருத்திரங்கண்ணனார்,[4] முடத்தாமக்கண்ணியார்,[5] கருங்குழலாதனார்,[6] கழாத்தலையார்,[7] முதலிய நல்லிசைப் புலவர்களை எவரினும் நன்குமதித்து, வேண்டுவன கொடுத்துப் பாதுகாத்து வந்தமையின், தொகைநூல்களிலும் பிறவற்றினும் அவர்கள் புகழ்ந்து பாடும் பெருமை பெற்றனன். தன்னையும் தன் வீரத்தையும் செங்கோன் முறைமையையும், தனது இராஜதானியாகிய காவிரிப்பூம்பட்டினத்தையும் சிறப்பித்துப் பாடிய உருத்திரங்கண்ணனார்க்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்துப் பட்டினப்பாலையைக் கொள்வானாயினன்.[91]

இவன்மகள் ஆதிமந்தியாரையன்றி,[92][1] வெள்ளிவீதியார்,[2] வெண்ணிக் குயத்தியார்,[3] குறமகள் இளவெயினி,[4] குறமகள் குறியெயினி,[5] காவற்பெண்டு,[6] காக்கைபாடினியார் நச்செள்ளையார்,[7] ஒக்கூர் மாசாத்தியார்,[8] குன்றியாள்,[9] கழார்க்கீரன் எயிற்றியார்,[10] நக்கண்ணையார்,[11] கன்னகையார்,[12] காமக்கணிப்பசலையார்,[13] பூங்கண்ணுத்திரையார்,[14] பொன்மணியார்,[15] பாரிமகளிர்,[16]

---

90. (i) அகநானூறு ௧௨௫, ௨௪௬, ௩௭௬.
(ii) ஷை ௧௪௧.
(iii) ஷை ௫௫.
(iv) பட்டினப்பாலை.
(v) பொருநராற்றுப்படை.
(vi) புறநானூறு—௭, ௨௨௪.
(vii) ஷை ௬௬.

91. "தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தொடாறுநூ றாயி ரம்பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டதும்"—

கலிங்கத்துப்பரணி.

92. (1) குறுந்தொகை, ௩௧. (2) அகம் ௩௬, ௪௫. குறு : ௨௫, ௪௪, ௫௮, ௧௩௦, ௧௪௬, ௧௪௯, ௧௬௯, ௩௮௬. நற்றிணை ௭௦, ௩௩௫, ௩௪௮. (3) புறம் ௬௬. (4) புறம் ௧௫௭. (5) நற் : ௩௭௫. (6) புறம் ௮௬. (7) குறு : ௨௧௦. பதிற்றுப் பத்தில் 6-ம் பத்து. (8) அகம் ௩௨௪, ௩௮௪. புறம் ௨௭௯. குறு : ௧௨௬, ௧௩௯, ௧௮௬, ௨௨௦, ௨௭௫. (9) குறு : ௫௦. (10) அகம் ௧௬௩, ௨௧௭, ௨௩௫, ௨௯௪. குறு ௩௫, ௨௬௧. நற் : ௨௮௧. (11) நற் : ௧௯, ௮௭. (12) குறு : ௧௧௮, ௩௨௫. (13) நற் : ௨௪௩. (14) குறு : ௪௮, ௧௭௧; புறம் ௨௭௭. (15) குறு : ௩௯௧. (16) புறம் ௧௧௨.

ஔவையார்,[17] முதலிய பெண்மணிகளும் புலமைமுற்றி எண்ணிறந்த பாடல்களைப் பாடித் தமிழகத்தை அலங்கரித்தனர்.

புலவர்களின் கல்வித் திறமையைச் சீர்தூக்குதற்குப் பட்டி மண்டபத்தையும்,[93] பலநூல்களையும் கற்றுச் சிறந்த நல்லாசிரியர் ஒருங்குசேர்ந்து பொருளாராய்ச்சி செய்து இன்புறத்தக்க கலைக்கழகங்களையும்[94] அமைத்து வைத்தனன். பரிசில்காரணமாகத் தன்னை நாடி வரும் புலவர்களைச் சேய்மையிற் காண்கின்றபோதே, அவர் என்பும் குளிர் கொள்ளுமாறு தண்ணென நோக்கும் தகைமை வாய்ந்தவன். அண்மிய சமயத்து, இன்மொழி வழங்கி, வழி வந்த வருத்தம் அகல உபசரித்து, மணியும் பொன்னும் பட்டுடையும் களிறும் கொடுத்து, தேர்மீது போகவிடுத்து, தமிழில் தனக்குள்ள ஆர்வ மிகுதியால், அவர் பின் காலின் ஏழடி நடந்துசென்று மீளும் கடப்பாடுடையவனாக இருந்தான்.[95]

---

(17) இவர் பாடிய செய்யுட்கள் மிகுதியாகக் காணப்படுகின்றமையின் விரிவஞ்சி குறிக்காது விடப்பட்டன.

குறிப்பு :—இப்பெண்பாற் புலவர்களில் வெண்ணிக்குயத்தியாகிய குயவர்மகளும், குறமகள் இளவெயினி, குறமகள் குறியெயினி யாகிய குறமகளிரும், காவற்பெண்டாகிய மறவர்குலப் பெண்ணும் காணப்படுவரேல், அற்றைநாளையில் பெண் கல்வி எத்துணை இன்றியமையாததெனயாவராலும் நன்கு மதிக்கப்பெற்றிருந்த தென்பது அறியத்தக்கது.

93. (i) " ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்
பட்டிமண்டபத்துப் பாங்கறிந் தேறுமின் "—

மணிமேகலை.

(ii) " பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம் "—

கம்பர்.

94. பட்டினப்பாலை, ௧௬௧—௧௭௧.

95. பொருநராற்றுப்படை, ௭௬—௯௨, ௧௫௧—௧௭௫.

இன்னும் இவன் காலத்தே பாரி, ஓரி, காரி, பேகன், ஆய், அதிகமான், நள்ளி என்னும் தமிழ்வள்ளல்களும் பிறரும் தமது பெருங்கொடையானே தமிழ்வளர்க்கும் கடப்பாட்டில் ஒருப்பட்டிருந்தனர். கபிலர், பரணர், நக்கீரர், இடைக்காடனார், மாமூலர் முதலாய பொய்யடிமை இல்லாத் புலவர் பெருமக்கள், மதுரைமாநகரில், கன்மாப்பலகை ஏறித் தமிழ் ஆராய்ந்த கடைச்சங்கமும் செழிப்புற்றிருந்தது. இவர்கள் இயற்றியவைகளும் தொகுத்தனவுமாகிய பத்துப்பாட்டும், நெடுந்தொகை நானூறும்,[96] குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும், ஐங்குறு நூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும்,[97] எழுபது பரிபாடலும், பதினெண் கீழ்க்கணக்கும், சிற்றிசையும், பேரிசையும், முத்தொள்ளாயிரமும்,[98] கூத்தும், வரியும் என்று இவைபோல்வன பலநூல்கள் வெளிவரலாயின. நல்லிசைப் புலவோர் தொகை நானூறுக்கு மேற்பட்டிருந்தது.

இன்னும், நால்வகையாழும்,[99] எழுவகைப்படும் முழவும்,[100] வங்கியங்களும், பிறவும் ஆகிய இசைக் கருவிகள் இவன் காலத்துப் பயிலப்பெற்று வந்தன. பண்ணல் முதலாய எண்வகைக் கிரணத்தால்,[101] குரல், துத்தம், கைக்கிளை,

---

96. அகநானூறு.

97. கலித்தொகை.

98. ஒவ்வொருவருக்கும் தொள்ளாயிரம் தொள்ளாயிரம் விழுக்காடாகச், சேர சோழ பாண்டிய ரென்னும் மூவேந்தரையும் குறித்துப் பாடப்பட்டதோர் நூல்.

99. (1) பேரியாழ், (2) மகரயாழ், (3) சகோடயாழ், (4) செங்கோட்டியாழ்; இவற்றை யன்றி, ஆயிரம் நரம்புகொண்ட ஆதியாழும் இருந்தது.

100. (1) அகமுழவு, (2) அகப்புறமுழவு, (3) புறமுழவு, (4) புறப்புறமுழவு, (5) பண்ணமைமுழவு, (6) நாண்முழவு, (7) காலைமுழவு.

101. (1) பண்ணல், (2) பரிவட்டணை, (3) ஆராய்தல், (4) தைவரல், (5) செலவு, (6) விளையாட்டு, (7) கையூழ், (8) குறும்போக்கு.

உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழிசையும்[102] எழுப்பி, அவற்றாற் பிறக்கும் பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி என்ற தலைசிறந்த நால்வகைப் பண்களையும், அவற்றைப் பண், பண்ணியம், திறம், திறத்திறம் எனப்படும் நான்கு[103] விதத்தாற் பேதப்படுப்பதால் உண்டாகும் நூற்றுமூன்று பண்ணீர்மையையும் இசைத்துக் காட்டி இன்புறுத்தவல்லார் பலர் இருந்தனர்.


அன்றியும், சிகண்டி முனிவரர் இயற்றிய இசைநுணுக்கமும், யாமளேந்திரர் செய்த இந்திரகாளியமும், தேவ இருடி நாரதன் அருளிய பஞ்சபாரதீயமும், ஆசிரியர் அறிவனாராற் செய்யப்பட்ட பஞ்சமரபும், சங்கத்தார் தந்தருளிய பெருங்குருகும், பெருநாரையும் உள்ளிட்ட இசைத்தமிழ் நூல்களும், குணநூல், கூத்தநூல், சயந்தம், செயிற்றியம், பரதசேனாபதீயம், பரதம், மதிவாணனார் நாடகத்தமிழ்நூல், முறுவல் முதலிய நாடகத்தமிழ் நூல்களும் தழைப்புற்றிருந்தன.

ஆகவே, இயற்றமிழேயன்றி இசை நாடகத்தமிழ்களும் செழித்துத் தழைப்புற்றிருந்த இத் திருமாவளவன் காலமே இங்கிலீஷுக்கு எலிஜபெத் காலமும், இலத்தீன் பாஷைக்கு ஆகஸ்டஸ் காலமும்போல, தமிழ்மொழிக்கு மகோன்னத காலமெனை ஐயம் சிறிதுமின்றிக் கூறலாம்.

---

102. இவ் ஏழிசையையும், சட்சம், இடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம், எனவழங்குப. ஆதி இசை, பதினோராயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றென்று என்பர் இசைத்தமிழ் நூற்புலவர்.

103. இந்நான்கும், முறையே சம்பூரணம், சாடவம், ஔடவம், சதுர்த்தம் என வடமொழிப் பெயரானும் வழங்கப்பெறும்.

## 8-வது அதிகாரம்.

# திருமாவளவன் சமயக்கொள்கையும் பிறவும்.

இனி, திருமாவளவன் அரியணை ஏறுதற்கு இருநூறு வருடங்களுக்கு முன்னர், வட இந்தியாவில் செங்கோலோச்சிய பௌத்த வேந்தனாகிய அசோகன், தன் மக்களாகிய சங்கமித்திரை, மகேந்து என்பாரோடு பௌத்த உபந்நியாசகர் பலரையும் தேயங்கடோறும் செலவிடுத்துத் தனது சமய உண்மையைப் பரவச்செய்த நாளையில், சேர சோழ பாண்டியர்கள் அரசுபுரிந்த தமிழ் நாட்டினும் பரவச் செய்தமையால்[104] பௌத்த மதக்கொள்கை நெடுநாளைக்கு முன்னமேயே தமிழ்நாட்டிலே இடம்பெற்றிருந்தது வெளிப்படை. இவன் காலத்தும், காவிரிப்பூம்பட்டினத்தில் அமண் தவப்பள்ளிகளும், பௌத்தமடங்களும் பிரபலமுற்றிருந்தன. அன்னிய நாடுகளினின்றும் வாணிகம் காரணமாக வந்து மருவூர்ப்பாக்கத்தே குடியேறிய யவனர், சோனகர், சாவகர் முதலாயோர் கொள்கையும் வெவ்வேறிருந்தன. இவ்வாறு பற்பல சமயங்கள் பரவியிருந்தும், அவற்றில் விருப்பு வெறுப்பு இன்றி, எல்லாச் சமயத்தையும் தனக்குச் சோபானமாகக் கொள்ளுதற்குரிய சைவசமயத்தைக் கைக்கொண்டிருந்தனன் என்பது, கச்சிநகரின்கண் ஏகம்பவாணரது கோயிற்றிருப்பணிசெய்து வழிபட்டமையானும், இவனது திருத்தொண்டினை, சைவசமய குரவர்

---

104. அசோகன் கல்வெட்டுச் சாசனம் II-ம் XIII-ம்.

நால்வரில் ஒருவராகிய திருஞானசம்பந்தப் பெருமானார் தேவாரப் பதிகத்துச் சிறப்பித்தோதிய வாற்றானும் அறியக்கிடக்கின்றது.[105]

இன்னும் இவன் வேதியர்களை மகிழ்வித்தல் காரணமாக, யாகசாலைகளை அமைத்திட்டு வேதவிதிக் கிணங்க வேள்விகளைச் செய்து முடித்தவன்.[106]

இனி, அரசர்கள் பகைவரை முனைமுகத்து முறியடித்திருப்பின், அதனை விளக்கும் தொடர் மொழிகளையும்

105. " விண்ணுளார் மறைகள் வேதம் விரித்தோதுவார்
கண்ணுளார் கழலின் வெல்வார் கரிகாலனை
நண்ணுவார் எழில்கொள் கச்சிநக ரேகம்பத்
தண்ணலா ராடுகின்ற லங்காரமே "—
திருக்கச்சியேகம்பம், 'மறையானை' என்னும் பதிகத்து ஏழாவது பாசுரம்.

இனி, கரிகாலப்பெயரினர் நால்வர் இருப்பவும், ஞானசம்பந்தப் பெருமான் திருமாவளவனையே எடுத்தோதினார் எனல் யாங்ஙனம்? ஏனைய கரிகாலர்களைக் கூறினார் எனக் கோடல் அமையாதோ எனின்? அமையாது. ஏனெனின், காலஞ்சென்ற ஸ்ரீமத் சுந்திரம்பிள்ளை யவர்கள், நுண்ணிதின் ஆராய்ந்து ஆங்கிலமொழியில் எழுதிய உரைநூலின் கண், திருஞானசம்பந்தர் காலம் கி. பி. ஏழாவது நூற்றாண்டின் தொடக்கமென வரையறுத்திட்டார்கள். நான்காம் கரிகாலன் கி. பி. 1070—1117 இலும், மூன்றாங்கரிகாலன் கி. பி. 1060—1070 இலும், இரண்டாங்கரிகாலன் கி. பி. பத்தாவது நூற்றாண்டிலும் இருந்தவன். முதற் கரிகாலனாகிய திருமாவளவனோ என்றால், கி. மு. முதலாவது நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் சிங்காதனம் ஏறினோன். ஒருவற்குத் தன்னோடு ஒரே காலத்தில் இருந்தாரையாவது, தனக்கு முற்பட்டிருந்தாரையாவது எடுத்துக் கூறுதற்கு இயலுமேயல்லாமல், பின்னே பிறப்பாரை எடுத்தோதுதல் ஒராற்றானும் கூடாது. ஆதலால், தேவாரத்துக் கூறப்பட்ட கரிகாலன், திருமாவளவன் எனக் கோடலே பொருத்தமுடைத்தாதல் காண்க.

106. " தூவியற் கொள்கைத் துகளறு மகளிரொடு
பரிதி யுருவிற் பல்படைப் புரிசை
எருவை நுகர்ச்சி யூப நெடுந்தூண்
வேத வேள்வித் தொழின்முடித் ததூஉம்
அறிந்தோன் மன்ற அறிவுடை யாளன் "—
புறம் உஉச.

அவ்வவர் பெயரோடு சேர்த்துப், 'பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்,' 'தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்' என வழங்கியவாறு, அவ்வரசர் இறந்த இடத்தையும், அவரவர் பெயர்க்குமுன் அடைமொழியாகப் பெய்து வழங்கி வந்தமை, 'வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி,' 'அரசு கட்டிலில் துஞ்சிய நெடுஞ்செழியன்,' 'கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழர்' என்பது முதலிய பிரயோகங்களால் அறியக் கிடக்கின்றது. இவ்வாறு வந்தவற்றுள், 'குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன்' என்னும் ஓர் தொடர்மொழியும் காணப்படுகின்றது. இதனைத் திருமாவளவனைக் குறித்ததெனக் கொண்டனர் பிள்ளையவர்கள். அவ்வாறு அவர்கள் கொண்டதற்கு ஆதாரம் 'அரிமா சுமந்த'[107] என்னும் செய்யுளேயாம். இதனை அன்றென நியாயவாயிலாகப் பிறர் மறுத்திடுமளவும், பெருந்திருமாவளவனும் திருமாவளவனும் ஒருவனே எனக் கொள்வதும் குற்றமாகாது. ஆகவே, இவ்விருவரையும் ஒருவர் எனக் கொள்ளின், திருமாவளவன் புலாலுடம்பு போக்கிய இடம் குராப்பள்ளி[108] யென விளங்கி நிற்றல் காண்க.

இனி, அஞ்சாது எதிர்நின்று போர்புரிந்து இறந்துபட்ட வீரனைமறவாது நினைவுகூர்தற்பொருட்டாக, அம்மறவனைப் போலக் கல்லில் உருவமைத்து பிரதிஷ்டை செய்வதும், அதற்கு நேரில் வேலை நட்டுத் தோற்பரிசையைத் தொங்க விடுதலும், பகைவர்நாட்டு மகளிரைச் சிறைகோடலும் கற்பும் மானமும் சிதைவுறாமல் அவரைப் பாதுகாத்துத் தம் நாட்டுக்கோவில்களில் கடவுட்டிருப்பணி செய்திட இருத்துதலும், கடவுளைத் தொழுவதற்கு அமைக்கப்பட்ட

107. "அரிமா சுமந்த வமளிமே லானைத்
திருமா வளவனெனத் தேறேன்"—
பொருநராற்றுப்படை.

108. குரா = ஒருவகை மரம், பள்ளி = இடம். ஆகவே குராப்பள்ளி என்பது, குராமரத்தைத் தலவிருக்ஷமாகக் கொண்டுள்ள திருவிடைக்கழி என ஊகிக்கப்படுகின்றது.

இடங்களைக் கோயில் என வழங்கிடாது பொதியில் என வழங்கியதும், அங்குத் தொழுகுறியாக அமைக்கப்படும் உருவத்தை மக்கள்வடிவாகச் செய்து வைத்திடாது கந்துரு நிறுத்தி வழிபட்டதும், வலைவளம் தப்புமாயின் நெய்தனில மக்கள் சுறாவின் கோட்டினைக் கடற்கரையில் நாட்டி வருணனை வழிபட்டுவந்ததும், இந்திரனைக் குறித்து விழாக் கொண்டாடிக்கடலாடியதும், கழார் முன்றுறையில் காவிரிப் புதுப் புனல் விழாக்கொண்டதும், பிறவும் திருமாவளவன் காலத்திற் காணப்பட்டு இற்றைநாளையில் வழக்கு வீழ்ந் தவைகளாம்.

இன்னும், மன்னர் கடைத்தலையில் வீரம், நியாயம், கொடை என்னும் மூவகைக் குணங்களையும் ஒலி வேற்று மையால் அறிவுறுத்தும் முரசங்களை முழக்குதலும், அரசர்கள் தாம் செய்த அரிய வீரச்செயல்களை வீரக்கழலிற் பொறித்திடுதலும், 'அந்தணீர், மகளிர்காள், பிணியுடை யீர், புதல்வரைப் பெறுதீர் அரண்சேர்மின்' எனப் பறை யறைவித்துப் போக்கிப் பின்னர்ப் போர் தொடங்குதலும், நிரைகவர்தல் முதலாக நிகழும் போர்த்தொழில்களில் ஒவ் வொன்றற்கும் ஒவ்வொரு அடையாளப் பூவை மிலைந்து செல்லுதலும், மடிந்த உள்ளத்தோன், மகட்பெறுதோன், மயிர்குலைந்தோன், அடிபிறக்கிட்டோன், பெண்பெயரோன், கண்ணிழந்தோன், படையிழந்தோன், ஒத்தபடை யெடா தோன் ஆகிய இவர்களைப் போர்க்களத்தே கொல்லாது விடுதலும், தம் காவல் மரத்தினைப் பகைவர் அழியாமற் பாதுகாத்தலும் பிறர் காவல் மரத்தினைத் தாம் அழித்த லும் தமக்குச் சிறந்த வீரமாகக் கருதுதலும், முகத்தினும், மார்பினும் புண்படுதலை அணிகலமாகவும், முதுகிற் புண் படுவதைத் தோல்வியாகவும் நினைத்தலும், வலியறியாது எதிர்க்கும் பகைவரை ஆண்மையழித்து மகளிராக்கி, அவர்கொண்டு விளையாடுதற்கு இவைதருதல் ஒருதலை என்னும் வீரச்செயலை வெளிப்படுத்தற்கு அறிகுறியாகக் கொடிக்கருகே பாவையும் பந்தும் கட்டி, அரண்மனை வாயி லில் தூங்கவிடுதலும், வேள்வி செய்யாத பார்ப்பன மக்கள்

சங்கறுத்து வளையல் செய்து உயிர் வாழ்தலும், வாணிபத்தால் செல்வமும் புகழும் படைத்த வணிகர்க்கு, அரசன், எட்டி என்னும் பட்டமும் அதற்கடையாளமான பொற்பூவும் அளித்தலும், உழுவித்துண்ணும் வேளாளரில், சோணாட்டுப் பிறந்தார் வேள் எனவும் அரசு எனவும் உரிமையெய்துதலும், பாண்டிநாட்டார் காவிதிப்பட்டம் பெறுதலும், போர் நிகழ்காலத்து அடைமதிற்படின் அகத்து வாழ்வார் உயிர்வாழ்தற்குப் போதுமான விளையுளும், அதனை விளைவித்துக் கோடற் கேற்ற குளனும் விளைநிலனும் உடையவாக மதில் அமைத்தலும், பகைவர்கள் மதிலை முற்றுகை செய்யின், பழக்கிய பறவைகளை நகர்க்குப் புறம்பே செல்லவிடுத்து நெற்கதிர் கொணர்வித்து அருத்திக் குடிபடைகளைக் காத்தலும், வேட்டுவ மகளிர், புலி புலி எனக்கூய் வேங்கைமரத்தை அச்சுறுத்திப் பூக்கொய்தலும், யானைப்பாகர், தமக்கடங்காத யானைகளை யாழிசையால் வசப்படுத்தலும், கார்த்திகைக்குப், புதுவதாய் மணந்த மருமகளை அழைத்து அவலிடித்து விளக்கேற்றி விழாவயர்தலும், மக்கட்கு, தெய்வப் பெயர்களை இட்டு வழங்கிடாது, பெரும்பான்மையும், ஊர், தொழில், வடிவுபற்றிய பெயர்களை இட்டு வழங்குதலும், உலகின்பங்களை முற்றும் வெறுத்தோர் பட்டினி கிடந்து உயிர் துறத்தற்கு வடக்கிருத்தலும் பிறவும் பண்டைக்காலத்து வழக்கங்களாம்.

இன்னும் தமிழ் தழைத்துச் சிறப்புற்றிருந்த இப்பெருமாவளவன் காலத்தில், தனித் தமிழ்ச்செய்யுளாகிய ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நான்கனுள், பெரும்பான்மையும் அகவற்பாவும், சிறுபான்மை ஏனைய பாக்களும் நடைபெற்று வந்தனவேயன்றி, இற்றைநாளையில் பெருவழக்காகக் காணப்படும் விருத்தப்பாக்கள் நடைபெற்றதில்லை என்பது ஒருதலையாம்.

ஆரிய பாடைக்குரித்தாகிய விருத்தப்பாக்கள் வழங்கப் பெறாமையும், தனித் தமிழ்ப்பாக்களால் வெளிவந்தவற்றுள் நூற்றிற்கு நான்கிற்கு மேற்படாமல் ஆரியமொழிகள்

அருகி வழங்குதலையும், ஆரீராயுமிடத்து, இத்திருமாவளவன் காலத்திற்குச் சிறிது முன்னமேதான், ஆரியமக்கள் தமிழ்மக்களோடு கூட்டுறவெய்துந் தலைப்பட்ட காலமாயிருக்கலாமென ஊகித்தற்கு இடமாதலை உய்த்துணரத்தக்கது.

இதுகாறும் கூறிப்போந்தவாற்றால், சோழரென்பார், 'சோழர்குடி' என்னும் தமிழ்ப்பழங்குடிக்கட் பிறந்தவரென்பதும், இவர், இன்னகாலத்துக் குடியேறினோர் என நம்மனோரால் வரையறுத்தல் செல்லாத அத்துணை நெடுங்காலந்தொட்டு இத் தமிழகத்து மேம்பட்டு வந்தவரென்பதும், இக்குடிக்கண் தொன்மையுற்றவன் சோழன் கரிகாலன் என்பதும், பகைவர் கொளுவிய தீயாற் கால்கரிகினமையின், கரிகாலன் எனப் பெயர்பெற்ற இவன், காவிரியின் கரைகண்டு நாட்டைப் பெருவளம் படுத்தமையின் பெருவளத்தான் எனவும், காவிரிப்பூம்பட்டினத்தைத் தலைநகராகக்கொண்டு வாணிகத்துறையை வளம்படுத்துச் செல்வம் பெருக்கினமையின் திருமாவளவன் எனவும் பெயர் பெற்றனன் என்பதும், இவன் இமயம் முதற் குமரியின் காறும் ஒருமொழிவைத்து உலகாண்டவன் என்பதும், இவன் காலத்தில் தமிழ் மகோன்னத நிலையில் இருந்ததென்பதும், உழவு, வாணிகம், கைத்தொழில்களை விருத்தி செய்தலிற் பெருமுயற்சியும், இற்றை நாளையிற் காணப்படாத பற்பல நாகரீகச் செய்கைகளுற நாடாட்சி செய்தலிற் பெருநோக்கமும் உற்றவன் என்பதும், இவன் அரசு கட்டில் ஏறியகாலம் கி. மு. முதல் நூற்றாண்டின் இடைப்பட்ட காலமென்பதும் விளங்கி நிற்றல் காண்க.

இங்ஙனம், தமிழகமுழுவதும் தன்னடிப்படுத்த சோழன் கரிகாற் பெருவளத்தானைப்பற்றி யாம் கண்டவற்றை ஒருவாறு தொகுத்துக் கூறினேம். இவ் ஆராய்ச்சியிற் குற்ற நாடாது குணநாடித் தமிழ் மக்கள் மகிழுவாராக.

# அனுபந்தம்.

இனி, கரிகால்வளவன் காவிரியாற்றுக்குக் கரை கண்ட மேற்கோளாக, [சிறந்தகரை

"செல்லார் பணியுஞ் செம்பியர்கோன் செழுங்கா விரியின்
கல்லா லணைகட் டேற்றேவக் கரும முடித்த சோழியர்கள்
பல்லார் மேழி நெடுங்கொடியைப் பாயும் புலியி னெடும்பதித்த
வல்லாண் மையினர் குடிவாழ்வு வளஞ்சேர் சோழமண்டலமே."

என்னும் சோழமண்டலச் சதகச் செய்யுளையும்

"நோக்க சகனிற் றொளாயிரத்துத் தொண்ணூற்றின்
மிக்க கரிகால் வயவேந்தன்—பக்கம்
அலைக்கும் புனற்பொன்னி யாற்றணையை யிட்டான்
மலைக்கும் கொடைக்கரத்தான் வந்து."

என்னும் பிறிதொரு செய்யுளையும் எடுத்தாளுகின்றனர். இவை, நோக்குமிடத்து, காவிரியாற்றின்கண், சகவருடம் 990 அதாவது கி. பி. 1068இல், கல்லணை கட்டினன் கரிகாலன் என்பதை விளக்குகின்றன. இவன் கட்டிய வருடம் கி. பி. 1068 ஆயின், கி. பி. 1060 முதல் 1070 வரை செங்கோலோச்சி யிருந்த இராஜகேசரிவர்மன் வீரராஜேந்திரனே இவனாதல் வேண்டும். இவ் வீரராஜேந்திரனை மூன்றாங் கரிகாலன் என்ப. ஆதலால் இம்மேற்கோளைத் திருமாவளவற் காக்குதல் பொருந்தாமை காண்க. இற்றை நாளையிற் சிற்பநுட்பம் வல்ல ஆங்கில நன்மக்களாற் பெரிதும் பாராட்டப்பட்டு வருவதும் இக்கல்லணையே போலும்.

இன்னும் கரிகால்வளவனால் நன்குமதிக்கப்பெற்ற வேளாண்குடிகள் அறுபத்து நான்கு என்பதும், அக்குடிக் கட்பிறந்தவரே, சோழ வேந்தர்கட்கு முடிசூட்டும் மேம்பாடுற்றிருந்தன ரென்பதும்,

"எல்லா விளக்கும் விளக்கல்ல இதுவே விளக்காய் முக்குளத்தின்
நில்லா ரவியா விளக்குடனே நிரையாய் மூழ்கி நிலைநின்றார்
பல்லார் அறுபான் நான்குகுடிப் பழையார் கரிகாற் பார்த்திபர்க்கோர்
வல்லார் மகுட முடிசூட்டும் வளஞ்சேர் சோழ மண்டலமே."

என்னும் செய்யுளால் அறியக்கிடப்பினும், வேளாளர், சோழ மன்னர்க்கு முடிசூட்டும் வழக்கு, சங்கநூல்களிற் காணப் பெறுமல் புராணங்களிலேயே பெரிதும் பயிலப்பெற்று வருதலின், பிற்பட்ட கரிகாலர் காலங்களில் ஏற்பட்ட தொன்றாமென யூகிக்கற்பாலதேயாம்.